விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-474)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 19 திங்கட்கிழமை (05.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 291

## இலங்கையில் மீண்டும் கொரோனா

- கம்பஹாவில் பெண் ஒருவருக்கும் அவரது மகளுக்கும் தொற்று உறுதி
- 850ற்கும் மேற்பட்டோர் சுயதனிமைப்படுத்தலில்

**திவுலபிட்டிய பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய பெண் ஒருவருக்கும் அவரது 16 வயது மகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.**

அந்தப் பெண் தற்போது கொழும்பு தேசிய தொற்றுநோயியல் (ஐடிஎச்) மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பெண் காய்ச்சல் அறிகுறிகளுடன் கம்பஹா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், நோய் குணமடைந்து வீட்டுக்குத் திரும்பும் வேளையில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனா (23)

### இன்று தொடக்கம் பாடசாலைகளுக்கு 2ஆம் தவணை விடுமுறை

(கொழும்பு)

அனைத்துப் பாடசாலைகளும் இரண்டாம் தவணை விடுமுறைக்காக இன்றிலிருந்து மூடப்படுவதாக அரசாங்கம் அறிவித் (23)

### பொருட்களை வாங்குவதற்கு கடைகளில் குவிந்த மக்கள்



(18)

### கொரோனா தொற்று ஆடைத் தொழிற்சாலை பூட்டப்பட்டது

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பெண் பணிபுரிந்த ஆடைத் தொழிற்சாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாக அப்பிரதேச சுகாதார அதி (23)

### மறு அறிவித்தல்வரை கம்பஹாவில் ஊரடங்கு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக் காரணமாக கம்பஹா மாவட்டத்தில் (23)

### களனி பல்கலைக்கழகம் ஒரு வாரத்துக்கு பூட்டு

(கொழும்பு)

களனி பல்கலைக் கழகம், கம்பஹா (23)



### முகக் கவசம் அணியுங்கள்

பொலிஸார் அறிவுறுத்தல்

23 ஆம் பக்கம் பார்க்க

### கொரோனா தொற்றின் எதிரொலி புங்குடுதீவில் 22 பேர் சுயதனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவைச் சேர்ந்த இரண்டு யுவதிகள் உள்ளிட்ட 22 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

திவுலப்பிட்டியவில் கொரோனா தொற்றுடன் அடையா (23)

### போர்க்குற்றம் சாட்டப்பட்ட இராணுவத்தினருக்கு வெளிநாடுகளில் தண்டனை வழங்க வேண்டும்

ஐ.நா வதிவிடப் பிரதிநிதி ஜெனிவாவில் யோசனை



(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் சவேந்திர சில்வா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன உட்பட போர்க்குற்றம் சுமத்தப்பட்டுள்ள 59 படை அதிகாரிகளுக்கு எதிராக வெளிநாடுகளில் தண்டனை வழங்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி பெப்போலா டி கிரைஸ், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் மிச்சேல் பச்லெட்டிடம் (23)

### அல்லைப்பிட்டியில் ஆணின் சடலம் கரையொதுங்கியது

(யாழ்ப்பாணம்)

வேலணை அல்லைப்பிட்டியில் உள்ள வெண்புற விநாயகர் ஆலய கடற்கரை பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளதாக (23)

### பிறிமியர் லீக் அணியின் சின்னத்தில் உறுமும் புலிகள்

பொலிஸ், இராணுவம் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் இடம்பெறும (23)

## இந்திய - இலங்கை ஒப்பந்தம் சமஷ்டி தீர்வுக்கான கருவியாக இருக்கிறது

இந்தியாவின் இணையமூலமான கருத்தரங்கில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்

*(யாழ்ப்பாணம்)*

இலங்கையில் தமிழ் மக்கள் ஒரு சமஷ்டி தீர்வினை இந்தியாவின் உதவியுடன் வென்றெடுப்பதற்கு இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒரு கருவியாக இருக்க முடியும் என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்க முடியாது என்றும் ஆகவே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இந்தியா நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் வட மாகாண முன்னாள் முதலமைச்சரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார். *(24ஆம் பக்கம் பார்க்க)*

### பட்டப்பகலில் வீடுடைத்து 10 பவுண் நகை திருட்டு

தொல்புரத்தில் பயங்கரம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைபொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொல்புரம் பகுதியில் நேற்று பட்டப்பகலில் வீடு உடைக் கப்பட்டு 10 பவுண் நகை திருடப்பட்டுள்ளதாக வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் (23)

### துப்பாக்கிகளுடன் வவுனியாவில் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியா பன்றிக்கெய்த குளத்தில் விலங்குகளை வேட்டையாடுவதற்கு பயன்படும் சட்டவிரோத துப்பாக்கிகளுடன் ஒருவரை கைது செய் (23)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மீண்டும் இறுக்கமான சுகாதார நடைமுறைகள்

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு கடந்த காலங்களைப் போன்று மீண்டும் ஒத்துழைப்பை தாருங்கள் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


குறித்த ஊடக சந்திப்பில் பவித்ரா வன்னியாராச்சி மேலும் கூறியுள்ளதாவது, "ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம், கொரோனா தொற்றை ஒழிப்பதற்காக அதிகம் முக்கியதுவம் வழங்கியமைக் காரணமாக, ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக கொரோனா ஒழிப்பு விடயத்தில் இலங்கை விளங்கியது. நாமும் கொரோனா தொற்றிலிருந்து விரைவாக மீண்டோம்.

இதேவேளை நேற்று, ஒருவர் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். எனவே ஏனையோருக்குப் பரவுவதைத் தடுப்பதற்காக பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அத்துடன் மக்கள் அனைவரும் சுகாதார வழிமுறைகளை தொடர்ந்து பின்பற்றுவதுடன், அதிக சனநெருக்கடி மிக்க பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம்.

மேலும், கடந்த காலங்களில் போன்று மீண்டும் ஒத்துழைப்பை தாருங்கள்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி **மயூரினி அருணன்**
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர்**
**இராஜேஸ்வரி நடராஜா**

அவர்கள் நேற்றுமுன்தினம் (03.10.2020) சனிக்கிழமை காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(4373)

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.

## பல் பதவியேற்றுப் பணியுயர்ந்து வாழி!



திருமதி
**அபிராமி பார்த்தீபன்**

வேரூன்றிவிட்ட விக்னேஸ்வர விருட்சத்
தாய் மடியிற் தவழ்ந்து வடவலயக்
கல்விக் கதிபதியாய் கடமைப் பொறுப்பேற்ற
அபிராமி பார்த்திபனே வாழி! வாழி!

Congrats!

கல்லூரிச் சமூகம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/ விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி.

(C-477)

## மரண அறிவித்தல்

### தேவசகாயம் செல்வநாயகம்

(ஓய்வு பெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் - யாழ். பல்கலைக்கழகம்)



தோற்றம் – 23.07.1952
மறைவு – 04.10.2020

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் செல்வநாயகம் (ஓய்வு பெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் - யாழ். பல்கலைக்கழகம் ) நேற்று (04.10.2020) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவசகாயம் - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஞானமுத்து - றீட்டம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மரியகொறற்ரியின் பாசமிகு கணவரும் றொனாட் யஸ்மின் (பாதுகாப்பு உத்தியோகத்தர் - யாழ். பல்கலைக்கழகம்), ஆன்மேரி யஸ்மின், காலஞ்சென்ற பீற்றர் யஸ்மின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்ரனி றபாயேலின் (யாழ். பல்கலைக்கழகம்) பாசமிகு மாமனாரும் ஆனந்தம், பரமநாயகம், சகாயநாயகி, காலஞ்சென்ற பேரின்பநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் லூர்தம்மா, மரிய புஸ்பம், யசிந்தா, பூரணசெல்வி, ரஞ்சிதம் ஆகியோரின் உடன்பிறாவா சகோதரனும் வேதநாயகம் (புடவை வியாபாரி ), அன்ரன் அமலதாஸ் (புடவை வியாபாரி), ஞானபுஸ்பம், காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம், யஸ்தஸ்சின்னப்பு ஆகியோரின் மைத்துனரும் லியோபயஸ், வைசிகா, ஆன்மேரி, பேல்டன்பிளேயர் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் லீனஸ், லைனஸ், லிமிந்தா ஆகியோரின் பாசமிகு சிறியதந்தையும் யனோறியாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.10.2020) திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலியின் பின்னர் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(4379)

ஐயனார் வீதி,
சுன்னாகம்.

மகன் - 077 845 8558
077 006 8732

தகவல்:-
குடும்பத்தினர்


## சிவாச்சாரியார் தேவை

**கொழும்பிலுள்ள பிரபலமான இந்து ஆலயத்திற்கு சிவப்பிராமண குலத்தவரான சிவாச்சாரியார் தேவை.**

**40 வயதிற்கு மேற்பட்டவராகவும் சகல உற்சவங்களையும் நடாத்தக்கூடியவராகவும் உள்ளவர் நன்று.**
**நவீன வசதிகளுடன் கூடிய வீட்டு வசதி செய்து தரப்படும்.**

மேலும் சம்பள விபரங்கள் பேசித் தீர்க்கப்படும்.

(4336)

விபரங்கள்
**077 294 1961**
தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## வடக்கில் சத்தம் இல்லாத சாதனை என்று கூறுகின்றார் வடமாகாண இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனறல் செனறத் பண்டார



வடமாகாண இராணுவ கட்டளைத் தளபதி, இந்து பௌத்த கலாசார பேரவையின் பொது செயலாளர் M.T.S. ராமச்சந்திரன் அவர்களை 02.10.2020 அன்று இராணுவ தலைமை அலுவலகத்தில் அழைத்து பேசினார். வடக்கின் இரண்டாவது மொழியான சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளை இளைஞர்களுக்கு இலவசமாக கற்பித்து, அதுமட்டுமல்லாமல் தெற்கில் சிங்கள இளைஞ் யுவதிகளுக்கு தமிழ் கற்பித்து வருவதையும் பாராட்டி வாழ்த்தும் தெரிவித்தார்.

மேலும் ஒக்டோபர் 4ஆம் திகதி (நேற்று) வடக்கு மாகாணத்தில் 1200 மாணவர்களுக்கு (20-30 வயது எல்லை உடையவர்கள்)வ பரீட்சை நடைபெற்றது.இம் மாத இறுதியில் இந்து பௌத்த கலாசார பேரவையின் ஸ்தாபகர் மாண்புமிகு பிரதமர் மகிந்த ராஜபக்ச கலந்து கொண்டு சான்றிதழ் வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

வடக்கில் சத்தம் இல்லாத சாதனை என்று கூறுகின்றார் வடமாகாண இராணுவ கட்டளைத் தளபதி. கடந்த 10 வருடங்களாக 20,750 மாணவர்களுக்கு அரச பாடசாலைகளில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இலவசமாக கற்பித்ததை பாராட்டி இராணுவத்தால் பூரண ஒத்துழைப்பு தருவோம் என்றும் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா கட்டளைத் தளபதிகள் சந்திப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் கூறினார்.
மேலும் கலந்துரையாடலின் போது அவர் கூறுகையில், இந்து பௌத்த கலாசார பேரவைக்கு யாழ். நகர மத்தியில் கட்டடம் ஒன்றை அன்பளிப்பாக வழங்குவதாகவும் திரு. M.T.S. ராமச்சந்திரன் அவர்களிடம் கூறினார்.
இக் கற்கை நெறிக்கான நிதியினை திரு. M.T.S. ராமச்சந்திரன் அவர்கள் ஜேர்மனி ஸ்ரீலங்கா சர்வதேச சட்ட நிறுவனம் ஊடாக அன்பளிப்பு செய்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(C-476)




# இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதற்கான தடைச்சட்டம்

# உடனடியாக அமுலுக்கு வரவேண்டும்

## இல்லையேல் மக்கள் போராட வேண்டிவரும்–ஓமல்பே சோபித தேரர்

**(கொழும்பு)**

**இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதைத் தடை செய்வது தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு நிறைவேற்றும் வரையில் மக்கள் போராட்டங்களை நடத்த வேண்டும் என விலங்குகள் மற்றும் இயற்கைக்கான நீதி அமைப்பின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.**



நாரஹேன்பிட்டி - ஸ்ரீ சங்கா விகாரை மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை விலங்குகள் மற்றும் இயற்கைக்கான நீதி அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது.

நாட்டின் மீது அக்கறை கொண்ட தலைவர் ஒருவர் செய்ய வேண்டியது அதிகாரங்கள் அனைத்தையும் தன்வசப் படுத்திக் கொள்வதல்ல, நாட்டு மக்களுக்கான நலனைப் பெற்றுக் கொடுப்பதே உயிரினங்களை வதைப்பதை அனைத்து சமயங்களும் பாவச் செயல் என்றே கூறுகின்றன. இந்நிலையில் இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதை தடை செய்ய வேண்டும் என்பது தொடர்ச்சியாக பேசப்பட்டு வரும் விடயமாகும். அதற்கமைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு மாடுகளை வெட்டுவதை தடை செய்ய வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இதன்போது ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் அனைவரும் எந்த இன, மத பேதமுமின்றி அதனை ஆதரித்திருந்தனர். ஆனால், இந்தத் தீர்மானமானது உடனே நிறைவேற்றப் படாமல் ஒரு மாதத்திற்கு பிற்போடப்பட்டது. இதற்கு பிரதான காரணம் இறைச்சிக்காக மாடுகளை வெட்டும் வர்த்தகர்களினால் முன்னெடுக்கப்பட்ட அழுத்தமே.

தற்போது இந்தத் தீர்மானம் தொடர்பில் அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதனால் மேலும் காலங்கடத்தாமல் அதனை உடனே அமுலுக்கு கொண்டுவர வேண்டும். இந்நிலையில் சிலர் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவது பாவச் செயல் என்றால், ஏனைய விலங்குகளை உணவுக்காக பயன்படுத்துவது பாவச் செயல் இல்லையா? என்று கேள்வி எழுப்பி வருகின்றனர்.

அதுவும் பாவச் செயல்தான். ஆனால், முதலில் நாம் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவதை தடுத்துவிட்டு, அதிலிருந்து ஏனைய விலங்குகளையும் இறைச்சிக்காக வெட்டுவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். முதலில் இந்த தீர்மானமானது ஒரு இனத்தையோ, மதத்தையோ இலக்கு வைத்து எடுக்கப்பட்டதல்ல என்பதை கவனத்திற் கொள்ளவேண்டும் என அவர் தெரிவித்தார்.(ஜ-4)


# அனலைதீவில் மீன்பிடிப்படகுத்துறைமுக புனரமைப்பு

# திறந்து வைத்தார் நீதியரசர் விக்னேஸ்வரன்











(யாழ்ப்பாணம்)

அனலைதீவு கடற்றொழிலாளர் சங்க வேண்டுகோளுக்கமையவும் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளரின் வழிகாட்டலுக்கமையவும் ஜே/38 கிராம உத்தியோகத்தர் பிரிவைச்சேர்ந்த கடற்றொழிலாளர்கள் பயனுறும் விதமாக அனலைதீவு தெற்கில் புனரமைக்கப்பட்ட மீன்பிடி படகுத்துறை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி மீன்பிடித் துறையை ஆழப்படுத்தல் திட்டமானது கடற்றொழிலாளர் சங்கத்தவர்களின் வேண்டுகோளிற்கிணங்க தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்புச் செயற்குழுவின் செயலாளர் தவசெல்வம் சிற்பரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலுக்கமைய ரூபா 5 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு கடற்றொழிலாளர்களிடம் வைபவ ரீதியாக கையளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், பேராசிரியர் வி.பி.சிவநாதன், தவச்செல்வம் சிற்பரன், மதகுருமார்கள், இளைஞர் அணி உறுப்பினர் சி.மதுசன், ஊர்காவற்றுறை பிரதேச செயலக அதிகாரிகள், கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள், அனலைதீவு பொதுமக்கள்கலந்து கொண்டனர்.

ஆபத்தான கடற்பாறைகள் நிறைந்த கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு இது நாள் வரையில் பெரும் இன்னல்களையும் அசௌகரியங்களையும் அப்பிரதேச மீனவர்கள் சந்தித்து வந் துள்ளார்கள்.

இத் திட்டத்தின் பயனாக இனிவரும் காலங்களில் பாதுகாப்பான முறையில் அப்பிரதேச மக்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியும் எனக் கடற்றொழில் சங்கத் தலைவர் ஜோன் பொஸ்கோ தெரிவித்தார். (ஜ-4)

# சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஐவர் கத்தியால் குத்திப்படுகொலை

## பிரான்ஸில் பயங்கரம்



கொலையாளி, உயிரிழந்த மனைவி மற்றும் இரு பிள்ளைகள்.



கொலையாளியின் சகோதரியின் உயிரிழந்த இரு பிள்ளைகள்.

(பரிஸ்)

பிரான்ஸில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய்ப் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் தனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன், தனது சகோதரியின் இரு பிள்ளைகளையும் கத்தியால் குத்தியும், சுத்தியலால் அடித்தும் கொலை செய்துள்ளார்.

இச் சம்பவத்தில் ஐவர் கொல்லப்பட்டதுடன் ஐந்து பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்படும் நபருடன் உயிரிழந்த மனைவி, பிள்ளைகள் மற்றும் உயிரிழந்த சகோதரியின் பிள்ளைகளின் புகைப்படங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. (ஐ-4)

# இருவேறு குற்றச்செயல்கள்; இருவர் பொலிஸாரால் கைது

(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்றுப்பகுதியில் நேற்று முன்தினம் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச் சாட்டில் பொலிஸாரால் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் சட்டவிரோத மதுபான கசிப்பு உற்பத்தியிலீடுபட்ட குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 360 லீற்றர் கோடாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர்கள் இருவரும் விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (5-4-316)

# வீதியை கடக்க முற்பட்டவரை மோதிய மோட்டார் சைக்கிள்

(சாவகச்சேரி)

கொடிகாமம்-கச்சாய் வீதி ஒட்டங் கேணிப் பகுதியில் நடந்து வீதியைக் கடக்க முற்பட்ட முதியவர் ஒருவரை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் முதியவர் தலையில் படுகாயமடைந்துள்ளார்.

இதில் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 67வயது சின்னவன் சபாரட்ணம் என்ற முதியவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். மோட்டார் சைக்கிளை செலுத்தியவரும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-30)

# ஐ.தே.க-ஐக்கிய மக்கள் சக்தி விரைவில் ஒன்றிணைந்து செயற்படும்

## விஜயகலா நம்பிக்கை

(கொழும்பு)

அடுத்து மாகாண சபை, பிரதேச சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுமிடத்து, அதில் ஐக்கிய தேசியக் கட்சியும் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து போட்டியிடும் எனவும், அதற்கான நடவடிக்கைகள் தற்போதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

அரசியல் பழிவாங்கல் குறித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் இருந்து வெளியேறும் போது, ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு, யாழ்- சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவரை சித்திரவதை செய்து கொலை செய்ததாக கூறப்படும் விவகாரம் தொடர்பில், சி.ஐ.டி. யினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றினால் 10 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள, ஞானலிங்கம் மயூரன் எனும் பொலிஸ் உத்தியோகத்தர் ஆணைக்குழு முன்னிலையில் தனது கைது, தண்டனை ஆகியன அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என தனது தாயார் ஊடாக முறையிட்டிருந்தார்.

அம்முறைப்பாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரனை பிரதிவாதியாக, குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் பெயரிட்டிருந்த நிலையிலேயே நேற்று அவரை ஆணைக்குழுவில் ஆஜராக அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஊடகவியலாளர்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில், " நான் யாரையும் அரசியல் ரீதியாக பழி வாங்கவில்லை எனத் தெரிவித்தார்.



எதிர்வரும் காலங்களில் பிரதேச சபைக்கான தேர்தலொன்றோ அல்லது மாகாண சபை தேர்தலோ முதலில் நடத்தப்படலாம். அப்படி நடத்தப்படும் தேர்தலில் ஐ.தே.கவும் சஜித் பிரேமதாஸ தரப்பும் ஒன்றிணைந்தே போட்டியிடும். அதற்கான நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன.

ஐ.தே.கவுக்கு புதிய பிரதித் தலைவராக ருவன் விஜயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். இந் நிலையில் அவர் சஜித் பிரேமதாஸ தரப்புடன் பேச்சுக்களை நடத்துகின்றார். கண்டிப்பாக அடுத்துவரும் தேர்தலில் நாங்கள் இணைந்தே போட்டியிடுவோம்" என தெரிவித்தார். (ஐ-4)

# '20' இற்கு சுதந்திரக் கட்சி ஆதரவு

(கொழும்பு)

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைபுக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசுக்கு உறுதியளித்துள்ளது.

20 ஆவது திருத்தச் சட்ட வரைபு தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அண்மையில் குழு ஒன்றை அமைத்திருந்தது.

அந்தக் குழுவானது 20 இற்கு முழு ஆதரவையும் வழங்க வேண்டும் என்ற பரிந்துரையை முன்வைத்துள்ளது என்றும், அதனடிப்படையில் கட்சியின் தீர்மானத்தை ஜனாதிபதிமற்றும் பிரதமருக்கு சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி ஆகியனவும் 20ஆவது திருத்தத்தை ஆதரிக்கும் முடிவை ஆளுங்கட்சிக்குத் தெரியப்படுத்தியுள்ளன.

இதனிடையே எதிரணி உறுப்பினர்கள் ஐவர் அரசுடன் இணைவது உறுதி என சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-4)

# பாம்பு தீண்டிய நபர் உயிரிழப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கிரானில் படுக்கையிலிருந்த நபரை பாம்பு தீண்டியதில் குறித்த நபர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார். மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முறுத்தானைப் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை கடந்த 29 ஆம் திகதி இரவு தன்னுடைய வீட்டில் உறங்கிக் கொண்டிருக்கும் போது பாம்பு கடித்துள்ளது. பாம்புக்கடிக்குள்ளான குறித்த நபர் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஜ-4)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி

அமரர் சண்முகராஜா செந்தூரன்

(துர்க்காபுரம், தெல்லிப்பழை.)

தாயின் மடியில் 16.03.1970

அம்பாள் மடியில் 05.04.2020



கணப்பொழுதும் எண்ணவில்லை
எம் கலங்கரை விளக்கமே தூரா
நீ இமைப்பொழுதில்
எம்மை விட்டுப் பிரிந்தனையோ
அன்புடன் எமக்கு உறுதுணையாக
இருந்த தெய்வமே
நீ இல்லாத உலகம் என்றும் இருள் மயமானது
எங்கே காண்போம்
உன் மலர்ந்த முகத்தை
உம் பிரிவைத் தாங்குமோ
எம் இதயம் ஒவ்வொரு நொடியிலும்
இதயத் துடிப்பைப் போல் உணர்வோம்
நீ எம்மை விட்டுச் சென்றாலும் எம் அருகில்
இருப்பதை நாம் உணர்கிறோம்.

(4368)

சகோதரர் குடும்பம், ஆசை அன்ரி, க.ரவீந்திரன்.

# பெண்ணின் மூளையைத் துளைத்த பி.சி.ஆர். பரிசோதனைக்கருவி

(வோஷிங்டன்)

கொரோனாவை கண்டறிய உலகளாவிய ரீதியில் பி.சி.ஆர் எனும் பரிசோதனை முறை கையாளப்படுகிறது. இம்முறை மூலம் மூக்கு மற்றும் வாய் வழியாக மாதிரிகள் எடுக்கப்படுகின்றன.

அமெரிக்காவை சேர்ந்த 40 வயதான பெண் ஒருவருக்கு மூக்கு வழியாக மாதிரி எடுக்க முற்படும்போது, பரிசோதனை செய்தவரின் கவனக்குறைவால், அந்த கருவியானது மூக்குவழியாக மிக வேகமாக மூளையின் சுற்றுப்புற அமைப்பை துளைத்துள்ளது.

இதன் காரணமாக மூளையை சுற்றியுள்ள திரவமானது மூக்கு வழியாக அந்த பெண்ணுக்கு கசியத்தொடங்கியுள்ளதாக வைத்தியர் ஒருவர் மருத்துவ ஆராய்ச்சி இதழில் விரிவாக குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ஜ-4)

## 15 ஆம் ஆண்டு நினைவு



அமரர் பொன்னுத்துரை நாகேந்திரம் (ஓவசியர்)

பிறப்பு 06.04.1931

இறப்பு 21.09.2005

திதி: 05.10.2020

பிறப்போர் இறப்பது நியதி
ஆனாலும் உங்கள் இழப்பை
ஏற்பக முடியவில்லை
உம் ஆத்மா சாந்தி பெற
என்றும் பிரார்த்திப்போம்

சுதுமலை தெற்கு, மானிப்பாய். (C-470) குடும்பத்தினர்.

## 1 ஆம் ஆண்டு நினைவு நாள்

அமரர் திரு. ஏரம்பு.

இரத்தினவடிவேல்


தம்பி அண்ணா.... தம்பி ஐயா

அன்னை மடியில் 09 . 11 . 1946

ஆண்டவன் பிடியில் 18 . 09 . 2019

தேசப்பற்றாளர் திதி: 06.10.2020

உறவுகள் புலம்பல்



முற்றத்து மல்லிகையாய்
சுற்றம் சூழ வாழ்ந்த பெருந்தகையே
பெற்ற பிள்ளைகளாய் அனைவரையும் அரவணைத்து
நொந்து போன உள்ளங்களுக்கு மருந்திட்ட உன்னதமானவனே
தேவிபுரத்திற்கும் இருட்டு மடுவிற்கும்
ஒளியேற்றிய சூரிய பிரகாசமே
உங்களை காக்காப் பாவிகளாகி வாடுகின்றோம்
உங்களை நினைத்து நாளும் பொழுதும்
வாடா மலரான ஈழத்தேசியப் பூவே
மாவீரச் செல்வங்களோடு உங்கள்
உயிரும் ஒளிர உங்கள் ஊண் உடம்பு கரைந்தாலும்
கரையா நின் நினைவுகளோடு உங்கள் பணி தொடர்வோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



06.10.2020 நாளை செவ்வாய்க்கிழமை
அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இன்பர்சிட்டி, பருத்தித்துறை. 0779394679 தம்பியண்ணா குடும்பத்தினர்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் யோகக்கலை பாடமாகின்றது

## கலாநிதி. ஆறுதிருமுருகன்

(குப்பிழான்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரீக பீடம் ஆரம்பமாகியுள்ளது. இந்து நாகரீகம் தொடர்பான பாடத்திட்டத்தை எழுதுகின்றவர்களில் ஒருவராக என்னையும் அழைத்திருந்தார்கள். தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவுள்ள பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயா, பேராசிரியர் வேதநாயகம், பேராசிரியர் கலாநிதி- சுகந்தி முரளிதரன் ஆகியோர் ஒரு குழுவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிக பீடத்தின் எதிர்காலத் திட்டமிடல்கள் தொடர்பிலொரு அறிக்கையை இலங்கைப் பல்கலைக்கழக ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தோம்.

பல்கலைக்கழக ஆணைக்குழு அதனை அங்கீகரித்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெகு விரைவில் யோகா ஒரு பாடமாக அமையவிருக்கிறது என சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும், தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார்.

இயற்கை உணவு மூலிகை வைத்தியர் நாகலிங்கம் குலசிங்கம் எழுதிய "சித்தர்கள் வழி யோகா மற்றும் உணவு மருத்துவம்" எனும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர்தர வகுப்பு மாணவர்கள் இந்து நாகரீகம், இந்து சமயம் போன்ற பாடங்களில் பரீட்சையில் சித்தி பெற்றுப்



பல்கலைக்கழகம் செல்கின்ற போது ஒரு தனிப்பாடமாக யோகாவைக் கற்பதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேநேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விளையாட்டுத்துறை தொடர்பான பாடத்திட்டத்தைத் தயாரிக்கின்ற போது அதற்கு என்னையும் அழைத்திருந்தார்கள்.

அந்தப் பாடத்திட்டத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பாடத் திட்டத்தை தயாரிப்பதற்காக அழைத்தார்கள்.

சிவபூமி பாடசாலை மற்றும் பார்வையில்லாத பிள்ளைகளுக்கான விளையாட்டுத் துறை தொடர்பான விடயங்களை பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பித்தேன்.

பல்கலைக்கழக விளையாட்டுத்துறை பட்டப்படிப்புத் தொடர்பான பாடத் திட்டத்திலே விசேட தேவையுடையவர்களுக்கான விளையாட்டுத் துறை தொடர்பாக எழுதுகின்ற போது விளையாட்டு வீரர்களுக்கு கட்டாயம் யோகக் கலை அவசியமென்ற அடிப்படையில் அந்தத் துறையையும் சேர்ந்திருக்கிறார்கள் என அவர் தெரிவித்தார். (5-4-18)



மாநகர முதல்வர்கள் மன்றத்தின் வருடாந்த மாநாடு நேற்று யாழ். மாநகர முதல்வர் இமானுவல் ஆர்னோல்ட் தலைமையில் யாழ்ப்பாணம் "ஜெட்லிங் நோர்த்கேற்" விடுதியில் நடைபெற்றது. (படம் -சுமித்தி)



"விதையனைத்தும் விருட்சமே" இளைஞரணியின் ஏற்பாட்டில் "பிளாஸ்டிக் அற்ற யாழை நோக்கிய பயணம்" எனும் தொனிப்பொருளிலான மூன்றாவது கட்ட சமூகப் பணி நேற்று முன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி சரசாலை குருவிக் காட்டுப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

இதில் சாவகச்சேரிப் பிரதேச சபையின் தவிசாளர் க. வாமதேவன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சரசாலைப் பகுதி கிராம உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.இங்கு அகற்றப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுகள் மீள் சுழற்சிக்காக கொண்டு செல்லப்பட்டன. (படங்கள்-ரவிசாந்)

# அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி க.பொ.த (உ/த) - 2020 பரீட்சைக்கு முதற் தடவை தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் இன்று 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் 2 ஆம் தடவை தோற்றும் மாணவர்களுக்கான அனுமதியட்டைகள் முற்பகல் 10.30 மணிக்கும் வழங்கப்படும் எனவும் மாணவர்களை சுகாதார நடைமுறையை பின்பற்றி உரிய நேரத்திற்கு வருகை தந்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் அதிபர் ஆர். செந்தில்மாறன் அறிவித்துள்ளார். (5-4)


# ஆசிரியர் தின விழாவும் மின்சஞ்சிகை வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் உலக ஆசிரியர் நாள் விழாவும் கலாதீபம் மின் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும் இன்று 5 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் கலாசாலை ஜெகன் மோகினி மண்டபத்தில் அதிபர் வீ. கருணலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் வி.எஸ். குண சீலனும், மக்கள் வங்கி யாழ். பிராந்திய தலைமை அலுவலகப் பிரதி முகாமையாளர் கலாவாணி குணசீலனும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

கலாசாலையின் கலாதீபம் என்ற மாத மின்சஞ்சிகையின் (e - magazine) முதல் வெளியீடும்இன்று இடம்பெறும் (5-4)



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு அளவெட்டி அஞ்சல் சமூகம் ஏற்பாடு செய்திருந்த இரத்ததான முகாம் நேற்று முன் தினம் சனிக்கிழமை அளவெட்டி தபாலகத்தில் இடம்பெற்றது. இவ் இரத்ததான முகாமில் வடமாகாணப் பிரதி அஞ்சல் அதிபதி திருமதி- மதுமதி வசந்தகுமார் கலந்து கொண்டார். (படம்:- செ. ரவிசாந்)

# அஞ்சலி நிகழ்வும் நினைவுப் பேருரையும்


(யாழ்ப்பாணம்)

ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக் கூடத்தின் ஏற்பாட்டில் யாழ். மண்ணின் பிரபல ஓவியரும் இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் முன்னாள் விரிவுரையாளருமான அமரர் ஆசை இராசையாவின் அஞ்சலி நிகழ்வும் நினைவுப் பேருரையும் சாவகச்சேரி ரி.பி. ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக் கூடத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் ஓவியக்கூடத்தின் அரங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (5-4)



# ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது

## 20 குறித்து சட்டத்தரணி திருமதி கோசலை மதன்





(யாழ்ப்பாணம்)

20 ஆவது திருத்தச் சட்டத்தில் ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளதுடன் வெளிப்படைத்தன்மை பொறுப்புக்கூறலும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை முதுநிலை விரிவுரையாளரும் சட்டத்தரணியுமான திருமதி கோசலை மதன் சுட்டிக்காட்டினார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் ஏற்பாட்டில் 20 ஆவது திருத்தம் தொடர்பில் இடம்பெற்ற சிறப்பு ஆய்வரங்கு நேற்றையதினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் தன்னிகரற்ற அதிகாரங்களை ஓர் கட்டுக்கோப்பினுள் வரையறை செய்த திருத்தங்களில் 19 ஆவது திருத்தச் சட்டம் மிகமிக முக்கியமானதொன்றாகும். குறிப்பாக ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்களாக மட்டுப்படுத்தப்படல் ஒருவர் இருமுறை மட்டுமே நாட்டின் ஜனாதிபதியாக பதவிவகிக்க வரமுடியுமென்பதான கட்டுப்பாடு.

தகவல் அறியும் உரிமையை அடிப்படை உரிமையொன்றாக ஏற்று அங்கீகரிக்கும் ஏற்பாடு போன்றவை 20 ஆவது திருத்தத்தில் தொடர்ந்தாலும் 19 ஆவது திருத்தச்சட்டத்திலிருந்து நீக்கப்பட்டவைகளாக 19 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு மேலாக ஜனாதிபதியின் கடமைகள் என சில விடயங்கள் சேர்க்கப்பட்டன.

குறிப்பாக நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தல், அரசியலமைப்பை பாதுகாத்து மேம்பாடளித்தல், சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளை மதிப்பளித்து செயற்படுத்தல் முதலான ஜனாதிபதியின் கடமைகள் ஜனாதிபதி மீது 19 ஆவது திருத்தத்தின் மூலம் சுமத்தப்பட்டிருந்தது.

ஆனால் இக்கடமைகள் 20 ஆவது சீர்திருத்தங்களின் கீழ் நீக்கப்பட்டிருக்கின்றன. இதனால் ஜனாதிபதி அதிகாரங்களை மட்டும் கொண்டவராகக் காணப்படுகிறார்.

மேலும் அரசியல் பேரவையினை அகற்றி ஜனாதிபதியினால் பாராளுமன்ற பேரவை உருவாக்கப்படுகின்ற நிலை 20 ஆவது திருத்தச் சட்டத்தில் காணப்படுகிறது.

19 ஆவது திருத்தச் சட்டத்தில் காணப்படுவது போல் அல்லாமல் 20 ஆம் திருத்தச் சட்டத்தில் ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மை கேள்விக்குறியாக்கப்படுகிறது.

குறிப்பாக கணக்காய்வாளர் ஆணைக்குழு, பெறுகை ஆணைக்குழு போன்றவை 19 ஆவது சீர்திருத்தத்தில் காணப்பட்ட போதிலும் அவற்றை 20 ஆவது திருத்தத்தின் மூலம் நீக்கப்படுவதால் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் போன்றவை கேள்விக்குள்ளாக்கப்படுகிறது.

மேலும் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களை நியமிப்பது தொடர்பில் மட்டுப்படுத்தல் காணப்பட்டது. இருப்பினும் 20 ஆவது திருத்தத்தில் அவ்வாறு இல்லாமல் ஜனாதிபதி தன்னிச்சையாக பாராளுமன்ற உறுப்பினர்கள் எத்தனை பேரையும் அமைச்சர்களாக நியமிக்க முடியும்.

இதுபோன்ற பல மிக முக்கியமான சட்டத்திருத்தங்கள் 19 ஆவது சட்டத்திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்ட போதிலும் இவற்றில் பெரும்பான்மையான அதிகாரங்கள் 20 ஆவது சட்டத் திருத்தத்தின் மூலம் மீண்டும் ஜனாதிபதிக்கு வழங்கப்படவுள்ளதாக சுட்டிக்காட்டினார். (ஜ-6)

## மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்
## வட மாகாண சபை

## அரச காணி தொடர்பான அறிவித்தல்

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலுள்ள அரச காணிகள் தொடர்பாக பொதுமக்கள் தமது காணிகளை காணி சட்டவிதிகளுக்கு மாறாக பின்வரும் முறைகளில் தவறு இழைத்திருந்தால், அந்நடவடிக்கைகள் காணிச் சட்ட விதிமுறைகளுக்கு முரணாக காணப்படுவதுடன், அவ்வாறு தயாரிக்கப்படும் ஆவணங்கள் சட்ட வருவற்றவையுமாகும்.

இவ்வாறான சட்டத்திற்கு முரணான, கீழ் வரும் நடவடிக்கைகள் தொடர்பில் எமது திணைக்களத்தால் உறுதிப்படுத்தப்படும் போது குறித்த காணிகள் அரசுடைமையாக்கப்படுவதுடன், அத்துமீறி பிடிக்கப்பட்ட காணியும் தங்களிடமிருந்து சட்ட நடவடிக்கை மூலம் பறிமுதல் செய்யப்படும் என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

01. க்ாணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரக் காணியை அனுமதிப்பத்திரகாரர் தமது விருப்பப்படி விற்பனை ஒப்பந்தம், விற்பனைக் கடிதம் மற்றும் நொத்தாரிசு உறுதி போன்றவற்றின் மூலம் கைமாற்றம் செய்தல்.

02. காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர காணிகளை குடியிருப்பு மற்றும் விவசாய நோக்கம் தவிர்ந்த வர்த்தக நோக்கத்திற்காக பயன்படுத்துதல்.

03. அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரக் காணிகளை பிரதேச செயலாளரின் அனுமதியின்றி உத்தரவு பெற்ற நில அளவையாளர் மூலம் நில அளவை மேற்கொள்ளல், அரசகாணியை அனுமதியின்றி நிலஅளவை செய்தல்.

04. அனுமதிப்பத்திர காணியை தாம் அங்கம் வகிக்கும் சங்கத்தில் பிரதேச செயலாளரது அனுமதியின்றி ஈடு வைத்தல் அல்லது பிரதேச செயலாளரின் அனுமதி/அனுமதியின்றி ஏனைய நிறுவனங்களில் ஈடுவைத்தல்.

05. காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புக் காணிகளுக்கு அளிப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு மாறாக பிரதேச செயலாளரின் அனுமதியின்றி நொத்தாரிசு உறுதி மூலம் பிரிவிடல் செய்தல் மற்றும் உரிமை மாற்றம் மேற்கொள்ளல்.

06. அரச காணிகளுக்கு வழங்கப்பட்ட ஆவணங்களில் அனுமதிக்கப்பட்ட பிரிவிடல் விஸ்தீரணத்திலும் குறைவாக காணிகளை பிரிவிடல் செய்தல்.

07. குத்தகையில் வழங்கப்பட்ட காணிகளுக்குரிய குத்தகைப்பணத்தினை முறையாக செலுத்தாதிருத்தல் மற்றும் முறையான அனுமதியின்றி காணிகளை பிரிவிடல் செய்து உரிமை மாற்றம் என்பவற்றினை நொத்தாரிசு உறுதி மூலம் மாற்றம் செய்தல்.

08. அரச காணிகளை அத்துமீறிப் பிடித்து ஆவணமின்றி குடியிருந்து வருபவர்கள் காணியின் ஒரு பகுதியினையோ அல்லது முழுமையாகவோ வேறு நபர்களுக்கு விற்பனை செய்தல்.

09. அரச ஒதுக்கீட்டிற்குரிய காணிகளை அத்துமீறி கைப்பற்றுதல். (C-463)

பொ.குகநாதன்,
மாகாண காணி ஆணையாளர்,
மாகாண காணி ஆணையாளர் திணைக்களம், வட மாகாணம்.

# சலுகை விலையில் தேங்காய் விற்பனை செய்யத் திட்டம்



(கொழும்பு)

தேங்காய் விலை அதிகரித்துச் செல்கின்றமைக்கு தீர்வாக, பிரதான நகரங்களை அண்மித்த பகுதிகளிலுள்ள நுகர்வோருக்கு சலுகை விலையில் தேங்காய்களை விற்பனை செய்வதற்கான வேலைத்திட்டமொன்று அரசால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சதொச விற்பனை நிலையங்களை அண்மித்த பகுதிகளில் லொறிகளினூடாக தேங் காய் விற்பனையை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தேங்காய், கித்துள், பனை மற்றும் இறப்பர் அபிவிருத்தி, ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதாரண தெரிவித்துள்ளார்.

ஹோமாகம, பிலியந்தலை, ஹொரணை, கண்டி, நுவரெலியா, காலி உள்ளிட்ட பிரதான நகரங்களை அண்மித்த பகுதிகளில் 60 தொடக்கம் 70 ரூபா வரை தேங்காய் விற்பனையை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு ள்ளது.


இதனிடையே, தேங்காய் விலை அதிகரிப்பை கருத்திற் கொண்டு தேங்காய் ஏல விற்பனை இரண்டு வாரங்களுக்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


கணித, ஆங்கில வகுப்புகள்

ஆண்டு 6 தொடக்கம் G.C.E.O/L வரையிலான ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்கள் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு:-
077 089 6147
(4370)

# விதைப்புக்குச் சென்ற விவசாயிகளை கைது செய்து வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அடாவடி



(கிளிநொச்சி)

இயக்கச்சி கோவில் வயல் பகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரால் வழங்கப்பட்ட காணி உரித்து ஆவணங்களுடன் (பொமிட்) வயல் விதைப்பில் ஈடுபட்டிருந்த இயக்கச்சிப் பகுதியைச் சேர்ந்த 12 விவசாயிகளை நேற்று முன்தினம், காலை சுண்டிக்குளம் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தமது எல்லைக்குட்பட்ட பகுதியில் அத்து மீறி வயல் விதைப்பில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்ததுடன் அவர்கள் பயன்படுத்திய வாகனங்கள், மற்றும் உபகரணங்கள், தொலை பேசிகளையும் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை அறிவியல் நகர்ப் பகுதியில் உள்ள அலுவலகத்துக்கு கொண்டு சென்றனர்.

கொண்டு செல்லப்பட்டவர்கள் மாலை நான்கு மணியாகியும் விடுதலை செய்யப்படவும் இல்லை. பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்படவும் இல்லை.

இதனால் பதற்றமடைந்த அவர்களது உறவினர்களால் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ஜீவராஜா ஆகியோர் வனஜீவராசிகள் திணைக்கள பிரதான அலுவலகத்திற்கு சென்ற பொழுது கைது செய்யப்பட்டவர்கள் அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களின் கைது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் வினவிய பொழுது அதற்கு பதிலளிக்கக்கூடிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அலுவலகத்தில் இருக்கவில்லை. அங்கிருந்த தமிழ் பேசும் அதிகாரிகளிடம் வினவிய பொழுது அவர்கள் பதிலை தர மறுத்தனர்.

இந்நிலையில் கைதானவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட வேண்டும் என சிறீதரன் கேட்டுக் கொண்ட போதும் திணைக்களத்தினர் எவ்வித உடன்பாட்டிற்கும் வரவில்லை.

தடுத்து வைக்கப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட வேண்டும் இல்லை எனில் இவ் இடத்தை விட்டு செல்ல முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அலுவலக வாயிலில் அமர்ந்தார்.

அதன் பின்னர் கைது செய்யப்பட்ட 12 பேரையும் அவர்களது உடைமைகளையும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் மாலை 6 மணியளவில் ஒப்படைத்தனர்.

இவர்களை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த இருப்பதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தினர் தெரிவித்தனர். (5-4-312)

# இந்திய ரோலர்களால் பாதிக்கப்படும் கடற்றொழிலாளர்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கடற்பரப்பில் தொடர்கின்ற இந்திய ரோலர்களின் தொழில் நடவடிக்கையினைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த பத்தாண்டுகளாக இந்திய ரோலர்கள் முல்லைத்தீவு கடற்பரப்பில் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதன் காரணமாக உள்ளூர் கடற்றொழிலாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

காலத்திற்கு காலம் இந்திய ரோலர்களின் தொழில் நடவடிக்கைக்கு எதிராக முல்லைத்தீவு நகரில் ஆர்ப்பாட்டங்களை கடற்றொழிலாளர்கள் நடத்தி மாவட்டச் செயலகத்தில் ஜனாதிபதி, பிரதமர், கடற்றொழில் அமைச்சர்கள் ஆகியோருக்கு மனுக்கள் கையளித்தும் இந்திய ரோலர்கள் தொடர்ச்சியாக மீன்பிடியில் ஈடுபடுகின்றன.

சில காலங்களில் இந்திய ரோலர்கள் வருகை குறைந்திருந்தாலும் தற்போது இந்திய ரோலர்களின் நடவடிக்கைகள் மாத்தளன், சாலை ஆகிய கடற்பரப்பில் அதிகரித்துள்ளன.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினால் மாவட்டச் செயலகத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை முல்லைத்தீவில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் இந்திய ரோலர்களைக் கட்டுப்படுத்துவதில்லை எனவும் கடற்றொழிலாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர். (5-4-350)



கிளிநொச்சி சமூக அபிவிருத்தி பேரவையின் ஏற்பாட்டில் உடல் ஆரோக்கியத்திற்கும் சமூக விழிப்புணர்வுக்குமான நடைபயிற்சி நேற்றுக்காலை கிளிநொச்சி இந்துக் கல்லூரி தொடக்கம் கிளிநொச்சி மத்திய கல்லூரி வரை இடம் பெற்றது. இவ் விழிப்புணர்வு நடைபயிற்சியில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகங்களான தொழில்நுட்ப பீடாதிபதி திருமதி சிவமதி, விவசாய பீட பீடாதிபதி சூரியகுமார், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.கமலராஜன், யாழ். போதனா வைத்திய சாலையின் பணிப்பாளரும் கிளிநொச்சி சமூக அபிவிருத்தி பேரவையின் இணைப் பாளருமான மருத்துவர். த. சத்தியமூர்த்தி மற்றும் வைத்தியர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (படம்:நிபோஜன்)

# தெய்வீக கிராம நிகழ்வு



(மன்னார்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மாந்தை மேற்கு பிரதேச் செயலகத்தின் ஏற்பாட்டில் செய்த "தெய்வீக கிராம நிகழ்வு" நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ஆண்டாங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் இடம் பெற்றது.

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவசிறி இராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மா கலந்து கொண்டார்.

இதன்போது ஆண்டாங்குளம் சிறிநாகபூஷணி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை இடம் பெற்றது.

அதனைத்தொடர்ந்து ஆலயத்தில் இருந்து மண்டபம் வரை இந்து எழுச்சி ஊர்வலத்தைத் தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றதோடு சிறப்பு உரைகள் நடைபெற்றதுடன் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் கிராம மக்கள், பிரதேச செயலக அதிகாரிகள், அறநெறி பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (5-4-285)

# வேலை தேடுவோருக்கான இலவசப் பயிற்சிநெறி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வேலை வாய்ப்பற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் மனித வலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொழில்திறன் விருத்தி இலவச பயிற்சி நெறி இன்று 05 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறும்.

மேற்படி தொழில் திறன் விருத்தி இலவச பயிற்சி நெறியில் வேலை வாய்ப்புத் தேடும் இளைஞர், யுவதிகளை கலந்து கொண்டு பயன்பெறுமாறு முல்லைத்தீவு மாவட்ட செயலக மனித வலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (5-4)

# இராசிபலன்

05.10.2020
புரட்டாதி 19, திங்கட்கிழமை
திருதியை முற்பகல் 8.48 மணிவரை
பரணி பிற்பகல் 2.33 மணிவரை
சுபநேரம் 12.02 - 1.32 மணிவரை
இராகுகாலம் 7.32 - 9.02 மணிவரை
சந்திராஷ்டமம்- சித்தம், சுவாதி
கார்த்திகை விரதம், சங்கடகர சதுர்த்தி விரதம் வளவன்


மேஷம்

சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தெய்விக சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், வேலைச்சுமை கூடும்.


ரிஷபம்

தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆளாகலாம்.


மிதுனம்

உறவினர்களின் சந்திப்பால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.


கடகம்

செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபாடு காட்டுவீர்கள், அந்நியர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.


சிம்மம்

புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


கன்னி

திருடர் பயமுண்டு, குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.


துலாம்

வழிபாட்டில் ஆர்வம் கூடும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உற்சாகமான நாள்.


விருச்சிகம்

எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.


தனுசு

பிறருக்கு உதவும் எண்ணம். உருவாகும், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், போசன சுகமுண்டு, வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மகரம்

நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு, புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்யும் எண்ணம் உருவாகும்.


கும்பம்

எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.


மீனம்

குடும்ப உறவினர்கள் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.

நீ நினைத்தால் எல்லோருக்கும் எல்லாமுமாய் வாழலாம்

# மீண்டும் கொரோனாத் தாக்கம் ஏற்படாதென எண்ணாதீர்கள்

## எச்சரிக்கும் இராணுவத்தளபதி

(கொழும்பு).........

நாட்டில் கொரோனாவைக் கட்டுப் படுத்தியுள்ளமையால், அது மீண்டும் இங்கு வராது என்று அர்த்தம் கிடையாது என இராணுவத்தளபதி சவேந்திர சில்வா எச்சரித்துள்ளார்.




நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "உலகின்வல்லரசு நாடான அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தற்போது கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான. நிலையில், நாம் மிகவும் வெற்றிகரமாக கொரோனா தொற்றை இலங்கையில் கட்டுப்படுத்தியுள்ளோம்.

எனினும். மீண்டும் இங்கு வராது என்று அர்த்தம் கிடையாது.

நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் தொடர்ச்சியாக சுகாதார வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டும். இது அத்தியாவசியமாகவே கருதப்படுகிறது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

# பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்தல்

(கொழும்பு)

பாடசாலைகளில் காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பில் அறிக்கையொன்றை கோருவதற்கு மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி அறநெறிப் பாடசாலைகள் கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கான ஆவணங்கள் அனைத்து பாடசாலைகளுக்கும் அனுப்பவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.



குறித்த ஆவணங்கள் பாடசாலை அதிபர்களால் பூரணப்படுத்தப்பட்டு அமைச்சிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாடசாலைகளில் நிலவும் பௌதீக குறைபாடுகளை அடையாளம் கண்டு அவற்றை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் இரண்டு வாரங்களுள் முன்பள்ளிகளில் நிலவும் பௌதீக வளங்களுக்கான குறைபாடுகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன.

இதற்கான ஆவணங்களும் எதிர்வரும் ஓரிரு நாட்களில் முன்பள்ளிகளுக்கு அனுப்பப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

# 20ஆவது திருத்தம் தொடர்பில் ஆளும் கட்சி பேச்சுவார்த்தை

(கொழும்பு)

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற பாராளுமன்றத்தில் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக ஆளும் கட்சிக்குள் இறுதியான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


இதனடிப்படையில், 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு விசாரணைகள் முடிவடைந்த பின்னர், திருத்தச் சட்டம் குறித்து பாராளுமன்றத்தில் விவாதத்தை நடத்தி, வாக்கெடுப்பு நடத்தப்படும் தினம் முடிவு செய்யப்படவுள்ளது.

இதனிடையே 20 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற ஆளும் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவர், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் இணக்கத்தை பெற்றுக் கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஐ-7)

# பாராளுமன்றத் தேர்தலில் வாக்கெண்ணல் எவ்வாறு நடைபெறுகிறது?

## (நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்)

01



**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் பாராளுமன்றத் தேர்தல்-2020 இன் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது யாழ்.மத்திய கல்லூரி வளாகத்தில் இடம்பெற்ற சம்பவத்தையும் அதையொட்டி நடைபெற்று வந்த இணையம் ஊடான பிரசாரங்களையும் வித்தியாசமான கருத்துக்களையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இதேபோல் மட்டக்களப்பில் அங்கு தெரிவு செய்யப்பட்ட வியாழேந்திரனின் விருப்புவாக்குகளில் குளறுபடிகள் நடந்ததாக அவரின் கட்சியில் இரண்டாவதாக வந்தவர் குற்றஞ்சாட்டுகின்றார். இதேபோல் புத்தளம் மாவட்டத்திலும் குளறுபடிகள் நடந்ததாக பிரசாரம் செய்கிறார்கள். இப்போது இந்த விடயம் நீற்றுப் போய்விட்டது. இருந்தாலும் அரசியல் இலாபத்திற்காக மீண்டும் தீப்பற்றி எழும்.

இவ்வாறான பிரசாரங்கள் இதற்கு முன் நடந்த தேர்தல்களிலும் நடந்தன. இவ்வாறான பிரசாரங்களைப் பார்க்கும் போது மக்கள் மத்தியில் பலவிதமான சந்தேகங்கள் எழும். அதுமட்டுமல்ல அவர்கள் இனிவரும் தேர்தல்களில் வாக்களிப்பார்களா? என்ற சந்தேகம் கூட எழலாம். இக் கட்டுரையின் முக்கிய நோக்கம் வாக்காளர்களின் மனதில் எழும் சந்தேகங்களைப் போக்குவதும், இறுக்கமான மற்றும் செப்பமான வாக்கெண்ணும் நடபடிகள் ஊடாக எடுத்த வீச்சில் இவ்வாறான குளறுபடிகள் நடைபெறச் சாத்தியம் இல்லையென்பதையும் எடுத்துக் காட்டுவதேயாகும்.

> **“விருப்பு வாக்கு எண்ணிக்கையில் குளறுபடிகள் நடந்தன” என்ற பிரசாரங்களைப் பார்க்கும் போது மக்கள் மத்தியில் பலவிதமான சந்தேகங்கள் எழும். அது மட்டுமல்ல அவர்கள் இனிவரும் தேர்தல்களில் வாக்களிப்பார்களா என்ற சந்தேகம் கூட எழலாம். இக் கட்டுரையின் முக்கிய நோக்கம் வாக்காளர்களின் மனதில் எழும் சந்தேகங்களைப் போக்குவதும், இறுக்கமான மற்றும் செப்பமான வாக்கெண்ணும் நடபடிகள் ஊடாக எடுத்த வீச்சில் இவ்வாறான குளறுபடிகள் நடைபெறச் சாத்தியம் இல்லையென்பதையும் எடுத்துக் காட்டுவதேயாகும். மேலும் இக் கட்டுரை வேறெந்த நோக்கத்தையும் கொண்டு எழுதப்படவில்லை**

உண்மையிலேயே நடந்த இத்தேர்தலில் தனக்கு துரோகமிழைக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு வேட்பாளர் கருதினால், அதனை நேரடியாக நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்லலாம். இதன் மூலம் அவரது விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணுவதற்கு நீதிமன்ற உத்தரவைப் பெறலாம். இதைவிடுத்து இதனை அரசியல் சுயலாபத்துக்கு பயன்படுத்தி பிரசாரங்கள் செய்து மக்களின் மனங்களை குழப்புவது சமூகத்திற்கு ஏற்றதல்ல. இவ்வாறு செய்வதால் அரசியல்வாதிகள் தங்கள் காழ்ப்புணர்வைக் காட்டிக்கொள்ள முடியுமே தவிர வேறெந்த நன்மையையும் பெறப்போவதில்லை. மேலும் இது நேர்மையாக கடமையாற்றிய தமிழ் தேர்தல் அதிகாரிகள், தமிழ் அரச அதிகாரிகளின் மனதை புண்படுத்துவதும் சேறு பூசுவதாக மட்டுமே அமையும். இதனை யாழ்ப்பாண அரச அதிபரின் பேச்சில் காணக்கூடியதாக இருந்தது. மேலும் இப் பிரசாரங்கள் பற்றி திறம்படச் செயலாற்றிய தேர்தல் திணைக்களம் கண்டு கொள்ளப்போவதுமில்லை. அது மட்டுமல்ல சுயாதீன தேர்தல் கண்காணிப்பாளர்களாக செயற்பட்ட “PAFFEEAL” மற்றும் “CMEV’ போன்ற அமைப்புக்கள் இத்தேர்தல் நீதியானதும் நேர்மையானதும் எனக் கூறியுள்ளனர். இதுபற்றி ஜனநாயகத்தை வலுப்படுத்த விரும்புவர்களும் கொள்கை வகுப்பாளர்களும் மற்றும் சமூகநலன் ஆர்வலர்களும் கவனம் செலுத்த வேண்டும்.

> **உண்மையிலேயே ஒரு தேர்தலில் தனக்கு துரோகமிழைக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு வேட்பாளர் கருதினால், அதனை நேரடியாக நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்லலாம். இதன்மூலம் அவரது விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணுவதற்கு நீதிமன்ற உத்தரவைப் பெறலாம். இதைவிடுத்து இதனை அரசியல் சுயலாபத்துக்கு பயன்படுத்தி பிரசாரங்கள் செய்து மக்களின் மனங்களை குழப்புவது சமூகத்திற்கு ஏற்றதல்ல. இது நேர்மையாக கடமையாற்றிய தமிழ்த் தேர்தல் அதிகாரிகள், தமிழ் அரச அதிகாரிகளின் மனதை புண்படுத்துவதும் சேறு பூசுவதாக மட்டுமே அமையும். இதனை யாழ்ப்பாண அரச அதிபரின் பேச்சில் காணக்கூடியதாக இருந்தது. அது மட்டுமல்ல**

> **சுயாதீன தேர்தல் கண்காணிப்பாளர்களாக செயற்பட்ட “PAFFEEAL” மற்றும் “CMEV’ போன்ற அமைப்புக்கள் பாராளுமன்றத் தேர்தல்-2020 நீதியானதும் நேர்மையானதும் எனக் கூறியுள்ளனர்.**

**கேள்வி 1:-** விருப்பு வாக்கின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளிவரும் முன் ஒரு கட்சியைச் சேர்ந்த ஒருவர் தான் பெற்ற விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையை எவ்வாறு அறிய முடியும்?

**பதில் :-** ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்திலும் விருப்பு வாக்குகள் கட்சி ரீதியாக எண்ணப்பட்டு அதன் முடிவுகள் வாக்கெண்ணும் நிலையத்தில் இருக்கும் வாக்கெண்ணல் முகவர்களுக்கு காட்டப்படுவதோடு அவர்களின் கையொப்பங்களும் பெறப்படும். அதன் ஒரு பிரதி அவர்களுக்கு கொடுக்கப்படும். வாக்கெண்ணும் நிலையத்தில் இருக்கும் எந்தவொரு கட்சியை சார்ந்த வாக்கெண்ணல் முகவரும் இத் தகவலைப் பெறமுடியும். அதன் ஒரு பிரதி வாக்கெண்ணும் நிலையத்திலும் ஒட்டப்படும். இதன் மூலம் ஒரு வாக்கெண்ணும் நிலையத்தில் ஒரு கட்சியின் ஒவ்வொரு வேட்பாளர்களும் பெற்ற விருப்பு வாக்குகளை அறிய முடியும். இவ்வாறு ஒரு தேர்தல் மாவட்டத்தில் உள்ள சகல வாக்கெண்ணும் நிலையங்களிலுமிருந்து பெறப்பட்ட ஒரு வேட்பாளரது விருப்பு வாக்குகளை கூட்டினால் வரும் மொத்த விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை அத் தேர்தலில் அவ் வேட்பாளர் பெற்ற விருப்பு வாக்குகள் ஆகும்.

**கேள்வி 2:-** விருப்பு வாக்கின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளிவரும் முன் ஒரு கட்சியைச் சேர்ந்த ஒருவர், தான் வெற்றி பெற்றதாக எவ்வாறு அறிய முடியும்?

**பதில் :-** முதலாவதாக தனது கட்சிக்கு, கட்சி ரீதியாக எத்தனை ஆசனங்கள் கிடைத்துள்ளன என்று அவருக்கு தெரியவேண்டும். உதாரணமாக அவரது கட்சிக்கு மூன்று ஆசனங்கள் கிடைத்துள்ளனவென்று எடுப்போம். ஒரு வேட்பாளர் வெற்றி பெற வேண்டுமாயின் அவர் அக் கட்சியில் விருப்பு வாக்கில் முதல் மூன்று இடத்திற்குள் வரவேண்டும்.

அவர் தான் முதல் மூன்று இடத்திற்குள் வந்ததாக தன்னை நிச்சப்படுத்திக்கொள்ள தனது கட்சியில் போட்டியிட்ட மற்றைய வேட்பாளர்கள் பெற்ற மொத்த விருப்பு வாக்குகளின் எண்ணிக்கைகளும் தெரிந்திருத்தல் வேண்டும்.

அதற்கு அவர் மற்றைய எல்லா வேட்பாளர்களும் அத்தேர்தல் மாவட்டத்தில் உள்ள சகல வாக்கெண்ணும் நிலையங்களிலும் பெற்ற விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையை தனது விருப்பு வாக்கு விபரம் பெற்றது போலப் பெற்று அவ் விருப்பு வாக்குகளை கூட்டி தான் எத்தனையாவது இடத்தில் இருப்பதாக அறிந்து கொள்ளலாம். அதன் மூலம் தான் வெற்றி பெற்றுள்ளாரா? என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

இந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் வாக்கெண்ணும் நிலையங்களாக யாழில் 73 நிலையங்களும் கிளிநொச்சியில் 14 நிலையங்களும் மொத்தமாக 87 வாக்கெண்ணும் நிலையங்களும் இதைவிட 16 தபால்மூல வாக்கு எண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டிருந்தன. இதைவிட ஒவ்வொரு கட்சியிலுமிருந்து 10 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். எனவே ஒருவர் தான் முதல் மூன்று இடத்திற்குள் வந்ததாக தன்னை நிச்சயப்படுத்திக்கொள்ள அவர் மொத்தமாக 103 வாக்கெண்ணும் நிலையங்களிலிருந்து 10 வேட்பாளர்களினதும் விபரங்களைப் பெற்று கணக்கிடல் செய்து கண்டுபிடிக்க வேண்டும்.

இந்த கணக்கீட்டைத்தான் யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்/ அரச அதிபர் செய்தார். இதைத் தான் அவர் செய்யமுடியுமே தவிர வேறெந்த மாற்றங்களும் அரச அதிபரானோ அல்லது அவரது அதிகாரிகளினாலோ செய்யமுடியாது.

> **விருப்பு வாக்கின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளிவரும் முன் ஒரு கட்சியைச் சேர்ந்த ஒருவர் தான் வெற்றி பெற்றதாக எவ்வாறு அறிய முடியும் என்பதற்கு கேள்விகள் 1 மற்றும் 2 இல் பதில்கள் தரப்பட்டுள்ளன. இக் கட்டுரையை தொடர்ந்து வாசிக்கும் போது வாக்கெண்ணல் என்பது எவ்வளவு இறுக்கமானதும் செப்பனானதும் எத்தனையோ நடபடிகளைக் கொண்டன என்பதையும் அறியமுடியும்.**

(தொடரும்)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலை

## அரசு அரசியல் இலாபத்திற்காக பயன்படுத்தியது

### சஜித் சாடல்

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலை இந்த அரசாங்கம், தனது அரசியல் சுயலாபத்திற்காகவே கடந்த காலங்களில் பயன்படுத்தியதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.**

மேலும், இந்த நாடகத்திற்கு மக்கள் ஏமாற்றமடையக்கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "பொதுத் தேர்தல் காலத்தின்போது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக அதிகளவாக பேசப்பட்டது. இதுதொடர்பாக பல்வேறு நாடகங்களும் அன்று அரங்கேற்றப்பட்டன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர்களுக்கு இந்த அரசாங்கம் வழங்கப்போகும் தண்டனை என்ன? எம்மைப் பொறுத்தவரை அவர்கள் அனைவருக்கும் மரண தண்டனை வழங்க வேண்டும்.

பொதுத் தேர்தல் காலத்தில், இந்த விவகாரத்தை அரசாங்கம் அரசியல் லாபத்திற்காகத் தான் பயன்படுத்தியது.

பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீனின் சகோதரனை இந்த அரசாங்கம் கைது செய்தது.

ஆனால், இன்று அவருக்கு எதிராக எந்தவொரு சாட்சியும் இல்லாத காரணத்தினால் அவரை விடுதலை செய்தது.

அப்படியானால், பொதுத் தேர்தல் காலத்தின்போது கூறிய கதைகளுக்கு என்ன ஆனது? இவை அனைத்தும் மக்களை முட்டாளாக்க அரசாங்கம் மேற்கொண்ட செயற்பாடாகவே நாம் கருதுகிறோம்.

இதிலிருந்தே அரசாங்கம் அரசியல் லாபத்திற்காகத்தான் இந்த விடயத்தை பயன்படுத்தியது என்பது உறுதியாகியுள்ளது.



இன்று உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் குறித்து கவனம் செலுத்தாமல், ஜனநாயகத்தை அழிக்கும் 20 ஐ கொண்டுவரவே இந்த அரசாங்கம் முயற்சி எடுக்கிறது.

இது அரசியல் கண்ணாமூச்சி நாடகமாகும்.

இதற்கு மக்கள் எந்தக் காரணம் கொண்டும் ஏமாந்து விடக்கூடாது" எனக் கேட்டுக்கொண்டார். (ஜ-4)

---

## ஒரு பிள்ளைக்கு இரு தாய்; அறிக்கை இன்று நீதிமன்றில்



(கொழும்பு)

ஒரு பிள்ளைக்கு இரண்டு தாய்கள் உரிமை கோரும் சம்பவம் தொடர்பில் பிள்ளையின் உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் டி.என்.ஏ. பரிசோதனை நடத்துவதற்கு சம்மாந்துறை பொலிஸார் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறவுள்ளனர்.

இதற்கமைய, தேவையான ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு வரும் நிலையில், குறித்த அறிக்கை இன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக சம்மாந்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி கே.டி.எச்.ஜயலத் தெரிவித்துள்ளார்.


2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் போது காணாமல் போன தனது மகனை 16 ஆண்டுகளுக்குப் பின் அவரது தாய் கண்டுபிடித்துள்ளார்.

சம்மாந்துறை நகரில் வசிக்கும் அபுசாலி சித்தி ஹமாலியா என்பவரே சுனாமியின் போது காணாமல் போன தனது மகன் ராஷின் மொஹமட் அக்ரம் ரிஷ் கானை தற்போது கண்டு பிடித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த இளைஞன் தன்னுடைய தாயை சந்தித்த செய்தி வெளியான நிலையில், மற்றொரு பெண்ணும், 21 வயதுடைய குறித்த இளைஞன் தன்னுடைய மகன் என சம்மாந்துறை பொலிஸில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

---

## வீதி காலவரையறையின்றி மூடல்




(ஹற்றன்)

போடைஸ் வழியாக ஹற்றன், டயகம வீதி திருத்தியமைக்கும் வரையில் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

நோர்வூட் பிரதேச சபையும் அக்கரபத்தனை பிரதேச சபையும் இணைந்தே குறித்த வீதியை மூடத் தீர்மானித்துள்ளது. (ஜ-4)

---

## மழையுடனான வானிலை நிலவும்

நாட்டின் சில பகுதிகளில் எதிர்வரும் சில நாட்களுக்கு மழையுடனான வானிலை நிலவக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, சப்ரகமுவ, தென், மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் மழையுடனான வானிலை நிலவக் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

---

## ஜோர்தானில் கொரோனாவால் இலங்கையர் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

ஜோர்தானில் தொழிற்சாலையில் பணியாற்றும் இலங்கையர்கள் பலருக்கு கொரோனாத் தொற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு கொரோனா தொற்றுக்குள்ளான இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டில் வசிக்கும் இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர் குருநாகல் பிரதேசத்தை சேர்ந்தவரென தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த நபர் பணியாற்றும் தொழிற்சாலையில் 1200 பேர் பணியாற்றுகின்ற நிலையில் அவர்களில் 400 பேர் இலங்கையர்களாவர். அந்த தொழிற்சாலையில் பணியாற்றும் இலங்கையர்கள் 400 பேரில் 300 பேர் வரையில் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அங்கு பணியாற்றும் இலங்கை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

---

## எனது தம்பியின் விடுதலைக்கும் அரசியலுக்கும் தொடர்பில்லை

### றிசாத் பதியுதீன்

(கொழும்பு)

எனது சகோதரர் விடுதலை செய்யப்பட்டமைக்கும் அரசியலுக்கும் எந்த தொடர்பும் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

சகோதரரை விடுதலை செய்தால் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு ஆதரவளிப்பதாக றிசாத் பதியுதீன் அரசாங்கத்திடம் தெரிவித்திருக்கக் கூடும் என்று நாம் சிங்களவர் எனும் அமைப்பு தெரிவித்துள்ளமை குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வாறு கூறப்படுவது அப்பட்டமான பொய்யாகும்.

எனது சகோதரர் ரியாஸ் பதியுதீன் நியாயமற்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டார்.

அவை நிரூபிக்கப்படாமையால் ஐந்தரை மாதங்களின் பின்னர் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவர் விடுதலை செய்யப்பட்டமைக்கும் அரசியலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டு தாக்குதல்களால் 200 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதோடு சுமார் 500 பேர் காயமடைந்துள்ளனர். இது மோசமான தொரு சம்பவமாகும். எனது தம்பியின் விடுதலைக்கும் அரசியலுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# பாரதம்

## மக்கா நோக்கி மீண்டும் படையெடுக்கும் யாத்திரிகர்கள்

(ரியாத்)

பல மாதங்களாக நடைமுறையில் இருந்த கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகளை சவுதி அரேபியா நீக்கிய பின்னர் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மக்காவில் அமைந்துள்ள இஸ்லாமியர்களின் புனிதமான தளத்தை சுற்றி வலம் வந்துள்ளனர்.

கடந்த மார்ச் மாத ஆரம்பத்தில் கொரோனா வைரஸ் உலளாவிய ரீதியில் தொற்று நோயாக உருவெடுத்ததன் காரணமாக நாடுகளுக்கிடையிலான பயணத்தடை மற்றும் ஊரடங்கு உத்தரவுகள் என்பன பிறப்பிக்கப்பட்டன.

இதனால் உலகெங்கிலும் இருந்து ஆண்டு முழுவதும் மில்லியன்கணக்கான மக்களை ஈர்க்கும் ஹஜ் மற்றும் உம்ரா யாத்திரையில் பங்கேற்பவர்களுக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது அந்த கட்டுப்பாடுகள் தளர்வடைய தொடங்கியுள்ள நிலையில், ஞாயிற்றுக்கிழமை சவுதி அரசாங்கம் மக்காவில் உள்ள மசூதிக்கு ஒரு நாளைக்கு அதிகபட்சம் 6,000 யாத்திரிகர்களை அனுமதிக்கத் தொடங்கியது. (4)

## சுஷாந்த் மரணம் கொலையல்ல; தற்கொலைதான்

### மருத்துவர்குழு அறிக்கையில் தகவல்



(டில்லி)

சுஷாந்த் சிங் ராஜ்புத் மரணம் கொலையல்ல, தற்கொலைதான் என மருத்துவர்கள் குழு தெரிவித்துள்ளது. பொலிவுட் நடிகர் சுஷாந்த் சிங், மும்பையில் உள்ள தனது இல்லத்தில் தூக்கிட்ட நிலையில் சடலமாக கடந்த ஜூன் 15 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டார். அவர் தீவிர மன அழுத்தத்தில் இருந்ததால், அந்த முடிவை எடுத்திருக்கலாம் என்றும் போதைப் பொருள் விவகாரத்தில் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் பல்வேறு தகவல்கள் வெளிவந்தன.

சுஷாந்தின் காதலி ரியா, அவரைத் தற்கொலைக்குத் தூண்டியிருக்கலாம் என அவரது தந்தை பீகார் பொலிஸில் புகார் அளித்தார். அதேபோல், ரியாவின் வட்ஸ்அப் உரையாடல்களின் அடிப்படையில் அவர் மீது போதை தடுப்புப் பிரிவு பொலிஸார் இரண்டு வெவ்வேறு வழக்குகள் பதிவு செய்தனர். அதன் அடிப்படையில் ரியா, அவரது சகோதரர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அதேநேரம், சுஷாந்த் மரணம் தொடர்பான வழக்கு சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றப்பட்டது.

இந்த வழக்கு சி.ப.ிஐ.க்கு மாற்றப்பட்டு 57 நாட்கள் கடந்தும் விசாரணையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இந்த விவகாரத்தில் சி.பி.ஐ. அலட்சியமாகச் செயற்படுவதாக சுஷாந்த் தரப்பு சட்டத்தரணி விகாஸ் சிங் குற்றம்சாட்டியிருந்தார். மேலும், எய்ம்ஸ் மருத்துவர்களின் கூற்றுப்படி, சுஷாந்த் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டிருக்கிறார் என்பது 200 சதவிகிதம் உறுதியானது.

இந்தநிலையில், சுஷாந்தின் பிரேதப் பரிசோதனை அறிக்கை மற்றும் மருத்துவ அறிக்கைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட எய்ம்ஸ் மருத்துவர் சுதீர் குப்தா தலைமையிலான மருத்துவர்கள் குழு, தங்களது அறிக்கையை சி.பி.ஐ. யிடம் தாக்கல் செய்துள்ளது. அந்த அறிக்கையில் சுஷாந்தின் மரணம் கொலையல்ல. தற்கொலைதான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# உலகை உலுக்கும்

# 3.5 கோடியை எ

“உ(வோஷிங்டன்)

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 3.50 கோடியை எட்டியுள்ளது.”

சீனாவின் வுகான் நகரில் கடந்த ஆண்டு இறுதியில் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது உலகின் 210 நாடுகளுக்கு மேல் பரவியுள்ள இந்த வைரஸ் பெரும் மனித இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 3.50 கோடியைத் தாண்டியுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலில் சிக்கி மீண்டவர்கள் எண்ணி

## உ




க்கை 2.60

கொரோ

ளில் 66 அ

னோரின்





இந்தியாவில் அமைக்கப்பட்ட உலகின் மிக நீளமான “அடல் சுரங்கப்பாதை” இந்திய பிரதமர் நரேந்திர மோடியால் திறந்து வைக்கப்பட்டது.

# “நான் இறந்து விடுவே

## அதி தீவிர நிலையில் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கொரோனாவால் பாதிக்கப்பட்டு இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் தமது உதவியாளர்களிடம் தாம் இறந்து விடுவேனா என அடிக்கடி கேட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. இலேசான அறிகுறிகளுடன் காணப்பட்ட ட்ரம்ப் பின்னர் காய்ச்சலுடனும் மூச்சுத்திணறலுடனும் அவசர அவசரமாக ஹெலிகொப்டர் மூலம் இராணுவ மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

தற்போது காய்ச்சலில் இருந்து ஜனாதிபதி ட்ரம்ப் விடுபட்டதாக மருத்து

வர்கள் தரப்பு தெரிவித்தாலும், அ

தொடர்பில் உறுதியான தகவல் வெ

வேண்டும் எனவும் மருத்துவர்க

தமது உதவியாளர்களிடம் ஜனா

என பலமுறை கேள்வி எழுப்பிய

மருத்துவர்கள் ஜனாதிபதி

நம்பிக்கையான தகவல்கள் வெள

கேள்விகளுக்கு பதிலளிக்க மறு

அவர்கள் கண்டுகொள்ளவே இ



# வெளிநாடு

# ் கொரோனா

# ட்டும் பாதிப்பு


## லக நாடுகள் அதிர்ச்சி



) கோடியைக் கடந்தது.
னாவுக்கு சிகிச்சை பெறுபவர்க
ஆயிரத்து 200 இற்கும் அதிகமா
நிலைமை கவலைக்கிடமாக
உள்ளது. உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 10.35 இலட்சத்தைக் கடந்துள்ளது. (4)

## ஆர்மீனியா – அசர்பைஜான் மோதல்

# அசர்பைஜான் இராணுவத்தினர் மூவாயிரம் பேர் உயிரிழப்பு



(பாகு)

ஆர்மீனியாவுடனான போரில் அசர்பைஜான் இராணுவத்தினர் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதாக ஆர்ட்சாக் குடியரசு ஜனாதிபதியின் ஊடக செயலாளர் நேற்று முன்தினம் சனிக்கிழமை தெரிவித்தார்.

அசர்பைஜானில் ஆர்மீனியர்கள் பெரும்பான்மையாகவுள்ள நகோர்னோ - கராபக் பகுதி தன்னாட்சி பெற்றதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தப்பகுதியில் அசர்பைஜான் தாக்குதல் நடத்தியது.

இதையடுத்து, ஆர்மீனியர்களுக்கு ஆதரவாகவும், அசர்பைஜானின் தாக்குதலுக்குப் பதிலடியாகவும் ஆர்மீனிய இராணுவத்தினர் பீரங்கி ஏவுகணைகளைக் கொண்டு தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையில் போர் மூண்டுள்ளது.

இந்நிலையில், கடந்த ஒரு வார காலமாக இடம்பெற்று வரும் இந்தப் போரில், அசர்பைஜான் இராணுவத்துக்கு பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, ஆர்ட்சாக் குடியரசின் **(Republic of Artsakh)** ஜனாதிபதியின் ஊடகச் செயலாளர் வக்ரம் போகொஸியன் **(Vagram Pogosyán)** தனது பேஸ்புக் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளார்.


அதில், அசர்பைஜான் இராணுவத்தினரின் இழப்பு மூவாயிரம் படைவீரர்களைத் தாண்டிவிட்டன என உளவுத்துறை தகவல்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு உயிரிழந்த வீரர்களின் பெரும்பாலான உடல்கள் நடுநிலை மண்டலத்தில் உள்ளன. அவற்றைக் கொண்டு செல்வதற்காக போக்குவரத்து நடவடிக்கைகள் எதுவும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை" என குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)



எனும் பெயர் சூட்டப்பட்ட நெடுஞ்சாலை சுரங்கப்பாதை (9.02km) நேற்று முன்தினம்

# கல்பனா சாவ்லா விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது



(வோஷிங்டன்)

சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு தேவையான பொருட்களுடன் நாசாவின் கல்பனா சாவ்லா விண்கலம், அன்டரேஸ் ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

விண்வெளியில் அமைந்துள்ள சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு பொருட்களை கொண்டு செல்வதற்காக, அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா சார்பில் விண்கலங்கள் அனுப்பப்படுகின்றன. அந்த வகையில் அமெரிக்காவின் நார்த்ரூப் கிரம்மான் நிறுவனத்தின் சிக்னஸ் விண்கலத்தை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தியாவில் பிறந்த நாசா விண்வெளி வீராங்கனையான கல்பனா சாவ்லாவின் பெயர் சூட்டப்பட்ட இந்த விண்கலத்தை கடந்த வியாழக்கிழமை இரவு விண்ணில் செலுத்தும் பணி தொடங்கியது.

விர்ஜினியாவின் வாலோப்ஸ் தீவில் உள்ள ரொக்கெட் ஏவுதளத்தில் இருந்து விண்வெளி பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப நிறுவனமான நார்த்ரூப் கிரம்மானின் அன்டரேஸ் ரொக்கெட், விண்கலத்தை சுமந்துகொண்டு புறப்பட தயாரானது. ஆனால், கடைசி நேரத்தில் தரைக் கட்டுப்பாட்டு அமைப்பில் திடீரென கோளாறு கண்டறியப்பட்டது. இதனால் ரொக்கெட் ஏவுவது ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் கோளாறு சரிசெய்யப்பட்ட நிலையில், வெள்ளிக்கிழமை இரவு விண்கலம் ஏவப்பட்டது.

9 நிமிடத்தில் ரொக்கெட்டில் இருந்து வெற்றிகரமாக பிரிந்த விண்கலம், சர்வதேச விண்வெளி நிலையத்தை நோக்கி பயணித்தது. இன்று திங்கட்கிழமை அதிகாலை விண்வெளி நிலையத்தை அடையும். (ஐ-4)

# வனா?"

# ı கேள்வி

வரது உள் உறுப்புக்களின் செயற்பாடு
ளிவர 48 மணிநேரம் கண்காணிக்க
ள் குறிப்பிட்டுள்ளனர். இதனிடையே
திபதி ட்ரம்ப், தாம் இறந்து விடுவேனா
ாக தகவல்கள் வெளியாகியுள்ளது.
ட்ரம்பின் உடல்நிலை தொடர்பில்
ரியிட்டாலும், பத்திரிகைகளின் முக்கிய
த்துவிட்டதுடன் அந்த கேள்விகளை
ல்லை என்ற குற்றச்சாட்டும் தற்போது



முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஜனாதிபதி ட்ரம்பின் உடல்நிலை கணிசமாக மோசமடைந்துள்ளதாக வெள்ளை மாளிகையின் தலைமை பணியாளர் மார்க் மெடோஸ் குறிப்பிட்டுள்ளார். அது மட்டுமன்றி தற்போதைய சூழலில் எதுவும் வெளிப்படையாக தெரிவிக்க முடியாது எனவும் அடுத்த 48 மணிநேரம் மிக மிக முக்கியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

### கொரோனாவால்

# மத்திய கிழக்கு நாடுகளில் 63 இலங்கையர்கள் உயிரிழப்பு

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கையர்கள் 63 பேர் இதுவரையில் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.**

இதில் நூற்றுக்கு 50 வீதமான மரணங்கள் சவுதி அரேபியாவில் பதிவாகியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


இதனையடுத்து சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 5 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதன் பிரதி முகாமையாளரும் ஊடக செய்தித் தொடர்பாளருமான மங்கள ரந்தெனிய தெரிவித்தார்.

வேலை நிமித்தமாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்ற இலங்கையர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஒரேநாளில் எழுவருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 395 ஆக அதிகரித்துள்ளது.



நேற்று முன்தினம் சனிக்கிழமை மாத்திரம், 7பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையிலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் தொற்று உறுதியான 128பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்றினால் நாட்டில் இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு தொடர்ந்து மக்களுக்கு, அரசாங்கம் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# உயிரிழந்த நிலையில் கரையொதுங்கும் கடலாமைகள்



(கொழும்பு)

கொழும்பு, கல்கிஸை கடற்கரைப் பகுதியில் உயிரிழந்த நிலையில் கடல் ஆமைகள் பல கரையொதுங்கியுள்ளதாக கல்கிஸை பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை வரை மொத்தம் மூன்று கடலாமைகள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

இதேவேளை காலி முகத்திடல் பகுதியிலும் உயிரிழந்த நிலையில் சில கடல் ஆமைகள் கரையொதுங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆமைகள் இவ்வாறு உயிரிழந்து கரையொதுங்கியுள்ளமைக்கு காரணங்கள் வெளிப்படுத்தப்படாத நிலையில் இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஜ-4)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# நல்ல பண்புகள்

ஒரு நண்பர் வந்தார். நல்ல பண்புகள் என்று சொல்கின்றார்களே அப்படி என்றால் என்ன சேர்? அப்படி என்று கேட்டார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது... இது கூட தெரிந்து கொள்ளாமல் இவ்வளவு நாள் இருந்துவிட்டாரே என்று நினைத்தேன்.

அதனால் தான் அவர் நமக்கு நண்பராக வந்து சேர்ந்திருக்கின்றார் என்று தோன்றியது. அதன் பின்பு தான் அவரை உட்கார வைத்து பேசிக் கொண்டிருந்தேன். எது எதெல்லாம் நல்ல பண்புகள் என்பதைப் பற்றி நபிகள் நாயகம் சொல்லியிருக்கின்றார்.

அவர் நமக்கு சொல்லியிருக்கின்ற நற்பண்புகள் என்னென்ன தெரியுமா?

ஒற்றுமையுடன் இருப்பது, நல்ல காரியங்கள் செய்வது, தர்மம் செய்வது, சலாம் சொல்ல முந்திக் கொள்வது, நோயாளிகளைச் சென்று காண்பது, நல்லவரா கெட்டவரா என்று பாராமல் பிரேத ஊர்வலத்தில் கலந்து கொள்வது, முஸ்லிமா -முஸ்லிம் அல்லாதவரா என்று பாராமல் அயலாருடன் அன்புடன் நடந்து கொள்வது, மன்னிப்பது, சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைப்பது, கோபத்தை அடக்குவது, விலக்கப்பட்டதைத் தவிர்ப்பது, உறவினர்களிடம் அன்பாய் நடந்து கொள்வது, கர்வம் கொள்ளாமல் இருப்பது.

இது எல்லாம் நற்பண்புகள் என்று நபிகள் நாயகம் சொல்லியிருக்கின்றார்.

இந்த பண்புகள் எல்லா மனிதர்களுக்கும் இருந்துவிட்டதென்றால் நாம் கஷ்டப்பட வேண்டிய அவசியமே இல்லை. ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்பதை ஒரு பண்பாகவே வளர்த்துக் கொண்டோம் என்றால் பின்பு நீ வேறு நான் வேறு என்னும் நினைப்பே வராது. நல்ல காரியங்களையே செய்ய வேண்டும் தீய காரியங்களைச் செய்யக்கூடாது.

தர்மம் செய்ய வேண்டும். அது ஒரு கடமை.

எதிரிலே ஒருவரைப் பார்க்கின்றோம். அவர் சொல்வதற்கு முன்னால் நாம் முந்திக் கொண்டு அவருக்கு சலாம் சொல்ல வேண்டும். அது ஒரு சிறந்த பண்பு.

ஒருத்தரின் உடம்பு சுகமில்லாமல் இருக்கின்றார் என்று கேள்விப் பட்டால் உடனே அவரைப் போய் பார்க்க வேண்டும். அது ஒரு பண்பு.

ஒரு பிரேத ஊர்வலம் போகின்றது என்று வைத்துக் கொள்ளுங்களேன். இறந்து போனவன் நல்லவனா கெட்டவரான்னு எல்லாம் பார்த்துக் கொண்டிருக்காமல் அந்த ஊர்வலத்திலே கலந்து கொள்ள வேண்டும் அது தான் சிறந்த பண்பு.

அந்த ஆளு நமக்கு வேண்டாதவன்... நாம் எதற்குப் போக வேண்டும்? என்று நினைக்கக் கூடாது. முஸ்லிமா-முஸ்லிம் அல்லாதவரான்னு பார்க்காமல் அயலாரிடம் அன்பாக நடந்து கொள்வதும் ஒரு நற்பண்பு என்கின்றார் நபிகள் நாயகம். வயதானவர்களை அலட்சியப்படுத்தக் கூடாது. அவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். அவர்களிடம் பணிவாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களை மதிக்க வேண்டும்.

மன்னிப்பு என்பது ஒரு பெரிய விடயம். மனிதனுக்கு அந்தப் பண்பு மிகவும் முக்கியம். சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைக்கிறது ஒரு சிறந்த குணம்.

கோபப்படக்கூடாது. கோபத்தை அடக்க வேண்டும். வேண்டாத விடயங்களையெல்லாம் விட்டுவிட வேண்டும். அதாவது விலக்கப்பட்டதையெல்லாம் தவிர்க்க வேண்டும். சொந்தக்காரர்களிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும். அது ஒரு சிறந்த பண்பு.

எந்த நிலைமையிலும் கர்வம் கொள்ளக் கூடாது. இது எல்லாம் நற்பண்புகள். என்று சொல்லி நபிகள் நாயகம் அடையாளம் காட்டுகின்றார். நாம் எல்லாம் அதைப் புரிந்து நடந்து கொண்டால் இந்த உலகத்திலே நல்ல விதமாக வாழலாம். புரிந்து கொள்ள வில்லை என்றால் கஷ்டம் தான்.

இப்பொழுது உதாரணத்திற்கு சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைக்கிறது ஒரு நல்ல பண்பு என்று இப்பொழுது பேசிக் கொண்டோம். ஆனால் இன்றைக்கு காலம் எப்படி இருக்கின்றது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கின்றேன் கேளுங்கள்.

ஒரு நடுத் தெருவிலே- ஒரு அடிதடி சண்டை நடக்கின்றது சுற்றி ஏகப்பட்ட கூட்டம். அந்தக் கூட்டத்து நடுவிலேயிருந்து ஒரு ஆள் தப்பித்து வெளியிலே வந்தான். அவன் சட்டை துணி மணியெல்லாம் கிழிந்து தொங்குகின்றது வசமாக அடி வாங்கியிருப்பான் போல் இருக்கின்றது. அவனைக் கூப்பிட்டு நான் அட்வைஸ் செய்தேன்.

ஏம்பா இது மாதிரி சண்டை போட்டுவிடுகின்றீர்கள்? சமாதானமாக போங்கள் அது தான் நல்லது என்றேன். அட போய்யா.. நான் சண்டை போட்டவன் இல்லை. அதைத் தீர்த்து வைக்கப் போனவன். இப்படி ஆகிவிட்டேன் என்று சொல்லிவிட்டு அங்கேயிருந்து வேகமாக நடந்து போகின்றான்.

# முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது

## ஜெனீவாவில் குற்றச்சாட்டு

(ஜெனீவா)

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்து 11 வருடங்கள் கடந்துள்ள நிலையில் முன்னாள் போராளிகளின் வளர்ச்சிக்காக அரசோ அல்லது சர்வதேச அமைப்புகளோ இதுவரை எந்தவொரு உதவிகளையும் செய்யவில்லை என ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 45 ஆவது கூட்டத் தொடர், கொரோனா வைரஸின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் பலத்த சுகாதார கட்டுப்பாடுகளுடன் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாகி ஜெனீவாவில் நடைபெற்று வருகின்றது.

குறித்த கூட்டத்தொடர், எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நடைபெறும். அந்தவகையில் மூன்றாவது வாரத்தில், மனித உரிமைகள் சபையின் பிரதான அவையில் இடம்பெற்ற பிரிவு 5 - மனித உரிமைகளின் கூறுகள் மற்றும் பொறிமுறைகள் தொடர்பான பொது விவாதத்தில், இளம் தமிழ் மாணவர் என்ற அமைப்பின் சார்பாக உரையாற்றிய பிரபாகரன் அர்சேனித்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த கூட்டத் தொடரில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, "இன அழிப்பு நடந்து 11 ஆண்டுகள் முடிந்த பிறகு தமிழர்களின் பொருளாதாரம் மிகவும் பின்னடைந்துள்ளன.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் படையினர் தமிழர் அரசியல் பகுதிகளையும் சமய இடங்களையும் ஆக்கிரமிப்பு செய்து, இன அழிப்பு போர் நடைபெற்ற காலத்தில் கொல்லப்பட்ட உறவுகளை நினைவுகூர தடைவிதிக்கின்றனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென தொடர்ந்து போராடுகின்ற தாய்மார்கள், பேரினவாதத்தால் தொடர்ந்து துன்புறுத்தப்படுகின்றனர்.

இராணுவம் தொடர்ந்து முன்னாள் போராளி குடும்பங்களை துன்புறுத்தி வருகின்றது.

போர் முடிவுக்கு வந்து 11 ஆண்டுகள் முடிந்தும் அரசாலோ சர்வதேச அமைப்புகளாலோ அவர்களது வளர்ச்சிக்காக எவ்வித உதவிகளும் செய்யவில்லை" என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# மூன்று முக்கிய திருத்தங்கள் செய்யப்படவில்லையெனின் அரசாங்கத்தின் அரசியல் பொறுப்பிலிருந்து விலகுவோம்

## தேசிய சுதந்திர முன்னணி அரசுக்கு அழுத்தம்

(கொழும்பு)

20 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தில் குழுநிலை விவாதத்தின் போது உள்ளடக்க வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக தேசிய சுதந்திர முன்னணி, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

பாராளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின் போது 20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தில் சேர்க்கப்படவுள்ள அரசாங்கத்தின் திருத்தங்களாக சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள ஆவணத்தில், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ச முன்வைத்த எவ்வித திருத்தங்களும் உள்ளடக்கப்படவில்லை என்பதை கவலையுடன் அறியத்தருவதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த திருத்தங்களில் 3 திருத்தங்கள் மிகவும் தீர்மானம் மிக்கவை எனவும் அது தொடர்பில் மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த எதிர்ப்புத் தொடர்பில் கவனத்தில் கொள்ளாது செயற்படுவதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைத்த மக்கள் ஆணை மற்றும் அரசாங்கத்தின் நற்பெயருக்கு குந்தகம் ஏற்படுகின்றது என்பதை பிரதமர் ஏற்றுக்கொள்வார் என நம்புவதாகவும் தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கு அதிக பங்குகள் உள்ள நிறுவனங்கள் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களை கணக்காய்வாளர் நாயகத்தி



னால் முன்னெடுக்கப்படுகின்ற கணக்காய்வில் இருந்து விடுவிப்பது முதலாவது விடயமாகவும் மக்கள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக வர்த்தமானியில் அறிவிக்காமல் அவசரமாக சட்டங்களை நிறைவேற்றுவது தொடர்பிலும் மக்கள் மத்தியில் எதிர்ப்பு ஏற்படலாம் என்பது இரண்டாவது விடயமாகவும் இரட்டைப் பிரஜாவுரிமை தடையைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அப்பால் தூதுவர்கள் மற்றும் அரச உயர் பதவிகளுக்கும் விதிப்பதற்கு மாறாக அந்தத் தடை முழுமையாக தளர்த்தப்பட்டுள்ளமை மூன்றாவது விடயமாகத் தேசிய சுதந்திர முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

இது மக்களின் ஆணையைப் பாதுகாப்பதற்காக தாம் கொண்டுள்ள அரசியல் நிலைப்பாடு எனவும் அரசாங்கம் அந்த அரசியல் நிலைப்பாட்டினை பொருட்படுத்தாமல் செயற்படுமாயின் அரசாங்கத்தின் அரசியல் பொறுப்பை தாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# செல்லப் பிராணிகளுக்கு தடுப்பூசி கட்டாயம் என்கிறார் வைத்தியர்

(கொழும்பு)

விலங்குகளுக்கு ஏற்படும் Rabies நோய்க்கெதிராக செல்லப்பிராணிகள் மற்றும் கால்நடைகளுக்கு தடுப்பூசி வழங்குமாறு அரசாங்கம் பொது மக்களை வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், Rabies நோயினால் கடந்த இரண்டு வாரங்களில் நான்கு விலங்குகள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் தங்களது செல்லப்பிராணிகளுக்கு தடுப்பூசியை வழங்குவதன் மூலம் நாட்டில் இருந்து Rabies நோயை இல்லாதொழிக்க முடியுமென தேசிய வைத்தியசாலையின், Rabies நோய் சிகிச்சைப் பிரிவுக்குப் பொறுப்பாளர் வைத்தியர் அமில குணசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் செல்லப்பிராணிகளின் அநாவசியமான இனப்பெருக்கத்தை நிறுத்த வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், தடுப்பூசி வழங்காமல் செல்லப்பிராணிகளுக்கு உணவளிப்பது வைரஸ் பரவுவதற்கு வழிவகுக்குமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், இதுவரை Rabies நோயினால் 18 விலங்குகள் உயிரிழந்துள்ளதுடன் 5 ஆயிரத்து 700 சந்தேகத்தின் அடிப்படையிலான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, Rabies நோயினால் பாதிக்கப்பட்ட ஐந்து நரிகள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 120 | 120-140 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 200 | 200 |
| தக்காளி | 180 | 200 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 100 | 80 |
| கோவா | 120 | 120 | 120 | 120 |
| கரட் | 120 | 180 | 200 | 200 |
| பூசணி | 80 | 100 | 90 | 80 |
| புடோல் | 100 | 90 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 200-220 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 170 | 180 | 180 |
| பாகற்காய் | 250 | 300 | 240 | 240 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 150 | 180 | 100 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 100 | 90 | 100 | 100 |
| கறிமிளகாய் | 280 | 280 | 260 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 160 | 100 | 120 |
| போஞ்சி | 300 | 260 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 90 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 35 | 60 | 40 |
| தேசிக்காய் | 80 | 100 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 400 | -- | — |
| வெங்காயப்பூ | 250 | 240 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 100 | 70 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | — | 100 | — | — |

# கடல் புறா

## பயங்கர ஓலை!

காலத்தின் பதிவு **10**




"எப்படி வந்தார் இவர்?" என்று குணவர்மன் விசாரித்தான்.

"சாளரத்தின் வழியாக."

"வீரர்கள் வரச் சரியான வழிதான் இது!"

"தவறாக எண்ணுகிறீர்கள், தந்தையே. இவர் கலிங்கத்தின் வீரர்களால் துரத்தப்பட்டார். தப்பி வந்து அறைக்குள் குதித்தார்."

"வீரர்களுக்குப் பயந்து பெண்ணிடம் சரணாகதியா? சிறந்த வீரன் தான். சந்தேகமில்லை."

தந்தை திரும்பத்திரும்ப இடக்காகவும் இகழ்ச்சியாகவும் பேசியதால் சற்றுக் கோபமடைந்த காஞ்சனாதேவி. "யோசித்துப் பேசுங்கள், தந்தையே! இவரை யாரென்று நீங்கள் அறியாமல் பேசுகிறீர்கள்!" என்று எச்சரித்தாள்.

"அந்த வாய்ப்பு உனக்குத்தான் முதலில் கிடைத்திருக்கிறது" என்றான் குணவர்மன்.

அவன் சொற்களில் கண்ட இகழ்ச்சியின் விளைவாகச் சீறி எழுந்த காஞ்சனாதேவி, "அந்த வாய்ப்பை உங்களுக்கும் அளிக்கிறேன், தந்தையே! பெற்றுக்கொள்ளுங்கள். யாரை நாடி நீங்கள் கலிங்கம் வந்திருக்கிறீர்களோ, யார் துணை கொண்டு சோழவேந்தன் உதவியை நாடக் கடல் கடந்து இங்கு வந்து தங்கியிருக்கிறீர்களோ! அந்த இளைய பல்லவர்தான் உங்கள் முன்பு நிற்கிறார்!" என்று கூறிவிட்டு அந்த அறையை விட்டுச் செல்லச் சரேலெனத் திரும்பினாள்.

"நில்லுங்கள், அரசகுமாரி!" என்று அவளைத் தடுத்த கருணாகரபல்லவன், "சைலேந்திர மன்னரே! விதியின் விசித்திரக் கயிறுகள் விபரீத நிலையில் இந்த மாளிகையில் நம்மைப் பிணைத்திருக்கின்றன. விரிவாகப் பேச இது சமயமல்ல. ஆனால் இதைமட்டும் படியுங்கள்" என்று தன் கச்சையிலிருந்த பையை எடுத்துப் பிரித்து, அதற்குள்ளிருந்த ஓர் ஓலையை எடுத்துக் குணவர்மனிடம் நீட்டினான்.

அந்த ஓலையை விளக்கின் அருகில் கொண்டு சென்று படிக்கத் தொடவங்கிய குணவர்மனின் முகத்தில் பெரும் வியப்பும் திகைப்பும் மெல்ல மெல்லப் படரலாயின. சில விநாடிகள் ஓலையைக் கையில் பிடித்த வண்ணமே நின்றுவிட்ட குணவர்மன் அந்த ஓலையைத் தனது மகளிடம் நீட்டினான். ஓலையில் கண்ட வரிகளில் ஓடிய ஏந்திழையின் கண்கள் மெல்ல எழுந்து இளையபல்லவனை நோக்கின.

"இந்த ஓலையில் கண்டிருப்பது உண்மையானால்... இதில் கண்டிருப்பது மட்டும் நடந்துவிட்டால்..." என்று ஏதோ சொல்ல முயன்று, பெரும் திகிலால் பேசமுடியாமல் சொற்களை விழுங்கினாள் காஞ்சனாதேவி.

அவளைத் தொடர்ந்து பேசிய குணவர்மனின் குரல் மிகவும் தீனமாக ஒலித்தது. "ஓலையில் கண்டிருப்பது நடந்தால் எங்கள் குலம் ஒழிந்தது! சைலேந்திரர் பேரரசு முறிந்தது! சொர்ண பூமியே அழிந்தது!"

"என்ன பயங்கர ஓலை! என்ன பயங்கரத் திட்டம்!" என்று காஞ்சனாதேவியும் பெருமூச்செறிந்தாள். அறை விளக்கின் சுடர்கூட லேசாக நடுங்கியது.

### சமரின் முரசொலி!

கச்சையில் செருகியிருந்த சுருக்குப் பட்டுப் பையிலிருந்து கருணாகர பல்லவன் எடுத்துக் கொடுத்த ஓலையைப் படித்த மாத்திரத்தில் பெரும் பிரமிப்புக்கும் திகைப்புக்கும் உள்ளான தந்தையும் மகளும் நீண்ட நேரம் ஏதும் பேசாமல் உள்ளத்தில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் எழுந்தோட ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே நின்றிருந்தார்கள்.

ஓலையைக் கண்டதால் அந்த இருவர் உள்ளத்திலும் ஏற்பட்ட திகிலையும் குழப்பத்தையும் நன்கு அறிந்து கொண்ட கருணாகர பல்லவன் அவர்கள் உணர்ச்சிகளின் கொந்தளிப்பு தானாகவே அடங்கட்டும் என்ற நினைப்பால் ஏதும் பேசாமல் அவர்கள் மௌனத்தில் தானும் பங்கு கொண்டானாகையால் அந்த அறையில் பயங்கரமான அமைதியே நிலவிக் கிடந்தது.

சதா அலைமோதும் மனித வாழ்க்கையில் அமைதிக்கோ மௌனத்துக்கோ எத்தனை நேரம்தான் இடமிருக்க முடியும்?

ஆகவே பல நிமிடங்கள் உணர்ச்சிவசப்பட்டு நின்ற தந்தையும் மகளும் கடைசியாக விளக்கடியிலிருந்து திரும்பி ஏதேதோ சந்தேகங்கள் பாய்ந்து நின்ற தங்கள் கண்களை இளைய பல்லவன்மீது செலுத்தினார்கள்.

குணவர்மனின் கண்களை ஒரு விநாடியே சந்தித்த இளைய பல்லவனின் கண்கள் காஞ்சனாதேவியின் அஞ்சன விழிகளை மட்டும் நீண்ட நேரம் கவர்ந்து நின்றதன்றி அத்தனை குழப்பத்திலும் சந்தேகத்திலும் சஞ்சலத் திலும்கூட அந்த விழிகளின் ஒளி சிறிதும் குன்றாதிருந்ததை அவன் மனம் எண்ணிப் பார்த்து எல்லையற்ற மகிழ்ச்சியையும் வியப்பையும் அடைந்தது.

குழப்பத்தின் விளைவாகப் பெரும் குருதி பாய்ந்து சிவந்து நின்ற வழவழத்த அவள் கபோலங்களின் அழகையும் காணத்தவறாத கருணாகர பல்லவன் திகைப்பிலும் குழப்பத்திலும் முகம் விகாரப்படுவது இயற்கை.

ஆனால் இயற்கையின் அந்த நியதியையும் மீறும் இவள் அழகு எத்தனை சிறந்தது? என்று தனக்குள்ளேயே ஆச்சரியப்பட்டுக் கொண்டான்.

தான் கொண்டுவந்த ஓலை அளித்த பயங்கரச் செய்தியைக் கேட்ட பின்பு சற்றே துவண்ட தேகத்தின் விளைவாக அவள் நுண்ணிய இடை ஒரு பக்கம் சாய்ந்து வளைந்ததால் அவள் நின்ற நிலையில் எத்தனை ஒய்யாரம் ஏற்பட்டது என்பதையும் கவனித்த கருணாகர பல்லவன், 'வாளேந்திய வீராங்கனையின் நிமிர்ந்த உருவத்துக்கும் இடை வளைந்து நிற்கும் இந்த மோகன பிம்பத்திற்கும் எத்தனை வித்தியாசம்! ஒவ்வொரு மாற்றமும் இவளுக்கு எத்தனை விதவிதமான அழகை அள்ளிச் சொரிகிறது! என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

காஞ்சனாதேவி அந்தப் பார்வை அம்புகளால் பெரிதும் அவஸ்தைப் பட்டுச் சற்றே நெளிந்தாளானாலும் தந்தை பக்கத்திலிருந்ததால் அந்த வாலிபன் பார்வையை அவரும் கவனித்துவிட்டால் என்ன செய்வது என்ற எண்ணத்தின் விளைவாக மேலும் தாமதம் செய்யாமல் பேச்சைத் தொடங்கி இந்த ஓலை உங்களிடம் எப்படிக் கிடைத்தது? என்று மெல்ல வினவினாள்.

கருணாகர பல்லவனின் கண்கள் காஞ்சனாதேவியின் பக்கத்திலிருந்த குணவர்மனை ஒரு முறை ஏறெடுத்து நோக்கி விட்டுப் பிறகு காஞ்சனாதேவியைச் சற்று உற்றுப் பார்த்தன.

தேவி! இந்த ஓலையைச் சோழ சாம்ராஜ்யாதிபதி வீரராசேந்திரரே என்னிடம் நேரிடையாகக் கொடுத்தார். உங்களிருவரையும் எப்படியும் கண்டுபிடித்துக் காப்பாற்றிச் சோழநாடு அழைத்துவரும் படியும் உத்தரவிட்டார்.

ஓலையில் கண்டிருந்த விடயத்தைக் கவனித்தீர்களா இல்லையா?" என்று பாதி விளக்கமும் பாதி கேள்வியும் தொனித்த சொற்களும் அவன் உதடுகளிலிருந்து உதிர்ந்தன.

இதற்குக் காஞ்சனாதேவி பதிலேதும் சொல்லாவிட்டாலும் திகில் நிரம்பிய குரலில் குணவர்மனே சொன்னான். நன்றாகக் கவனித்தோம் இளைய பல்லவரே! என்னையும் கலிங்கத்தைத் தாண்டு முன்பு கொன்று விடும்படி இந்த ஓலையில் உத்தரவிருக்கிறது."

உங்களுக்கு உங்கள் நாட்டில் நிரம்ப விரோதிகள் இருக்கவேண்டும் குணவர்மரே! என்று கூறிய இளையபல்லவன் சற்று நிதானித்து விட்டு, " ஆமாம், உங்கள் உயிருக்கே உலை வைக்க முயலும் இத்தனை கொடிய விரோதிகள் உங்களுக்கு ஏற்பட என்ன காரணம்" என்றும் விசாரித்தான்.

குணவர்மன் முகத்தில் அதுவரை இருந்த குழப்பமும் திகிலும் சரேலென மறைந்து அவற்றின் இடத்தைக் கம்பீரத்தின் சாயை ஆக்கிரமித்துக்கொண்டது.

அந்தக் கம்பீரம் குரலிலும் தாண்டவமாடப் பேச முற்பட்ட குணவர்மன், "விரோதிகள் என்று பன்மையில் பேச வேண்டாம் இளைய பல்லவரே! என் நாட்டு மக்கள் அனைவரும் என்னை நேசிக்கிறார்கள்.

(தொடரும்)

# எதிரும் புதிருமாக ஓ.பி.எஸ்-இ.பி.எஸ்

# தலைமை யார் கையில்?

அ.தி.மு.க.செயற்குழுவுக்குப் பிறகும் எடப்பாடி - பன்னீர் மோதல் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டேயிருக்கிறது. முதல்வர் வேட்பாளரை ஒக்டோபர் 7 ஆம் திகதியன்று அறிவிக்கவிருப்பதாக அந்தக் கட்சி தெரிவித்திருக்கும் நிலையில், இருதரப்பிலும் உக்கிரம் மென்மேலும் கூடியிருக்கிறது. ஆனாலும், கட்சியில் எடப்பாடி கை ஓங்கியிருக்கிறது என்பதுதான் லேட்ட ஸ்ட் அப்டேட்.

செப்டெம்பர் 28ஆம் திகதியன்று நடந்த செயற்குழுவில், முதல்வர் வேட்பாளர் குறித்து உச்சக் கட்ட மோதல் நடந்தது. 'வழிகாட்டுதல் குழு அமைக்க வேண்டும்' என்பதில் பன்னீர் தரப்பு விடாப்பிடியாக நிற்க... 'அதற்கு வாய்ப்பே இல்லை' என்று மறுத்துவிட்டது எடப்பாடி தரப்பு.

ஆத்திரமடைந்த பன்னீர், அடுத்தடுத்த நாட்களில் முதல்வரை முற்றிலும் புறக்கணித்தார். செப்டெம்பர் 29ஆம் திகதி நடந்த ஆட்சியாளர்களுடனான காணொளி ஆலோசனைக் கூட்டத்திலும் அவர் கலந்து கொள்ளவில்லை.

கிரீன்வேஸ் சாலையிலுள்ள தனது வீட்டில் கே.பி. முனுசாமி, மனோஜ் பாண்டியன் உள்ளிட்ட தன் ஆதரவாளர்களுடன் தீவிரமாக ஆலோசித்துக் கொண்டிருந்தார். அப்போதே அவர் கிட்டத்தட்ட இராஜினாமா மூடுக்குப் போய்விட்டார் என்கிறார்கள் அவருக்கு நெருக்கமானவர்கள்.


இதை முன்வைத்துத் தான் அவர் திடீரென்று தனது காரிலிருந்த தேசியக் கொடியையும் கழற்றினாராம். ஆனாலும், இதை பன்னீரின் வழக்கமான பூச்சாண்டிகாட்டும் வேலையாகவே பார்த்தது எடப்பாடியின் முகாம்.

### நீக்கப்பட்டபன்னீர் பெயர்!

இதற்கிடையே தன்னை வந்து சந்தித்த முக்குலத்தோர் சமூகத்தைச் சேர்ந்த அமைச்சர் ஆர்.பி. உதயகுமார், முன்னாள் அமை ச்சர் மணிகண்டன் ஆகியோரிடம்பன்னீர், "இதே நிலைமை தொடர்ந்தால், நம் சமூகத்தைச் சேர்ந்தவர்களை கட்சியில் ஒட்டுமொத்தமாக புறக்கணித்து விடுவார்கள்.

இப்போதே கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த சமூகத்தினரின் ஆதிக்கம் அதிகம் இருக்கிறது.நமது ஆட்களுக்குக் கட்சியில் பொறுப்பு கொடுக்கவேண்டும் என்று நான் நினைத்தால் எதுவும் நடப்பதில்லை. ஆனால், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி சொல்கிறவர்களுக்கு மட்டும் பதவிகள் தரப்படுகின்றன. நான் கட்சியிலிருந்து என்னபயன்?" என்று வெடித்தாராம்.

இவ்வளவு வெப்பத்துக்கு இடையே நடந்த இன்னொரு சம்பவம் பன்னீர்தரப்பை ஆத்திரத்தின் உச்சிக்கே கொண்டுசென்றிருக்கிறது. செப்டெம்பர் 30 ஆம் திகதி அன்று சென்னையில் திடக் கழிவு மேலாண்மை தொடர்பான திட்ட விழாவுக்காக அன்றையதினம் பெரிய அளவில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.



அந்த விளம்பரங்களில் முதலில் முதல்வர், துணை முதல்வர் உள்ளிட்டோரின் பெயர்களை வைக்க திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், கடைசி நேரத்தில் துணை முதல்வரின் பெயர் நீக்கப்பட்டே விளம்பரம் வெளியிடப்பட்டது. அரசு விழாவில் தனது பெயரை எப்படித் தவிர்க்கலாம் என்பதுதான் பன்னீரின் ஆத்திரத்துக்குக் காரணம்.

அதே கோபத்துடன் அன்றைய தினம் வீட்டை விட்டுக் கிளம்பி சி.எம்.டி.ஏ. அலுவலகத்துக்குச் சென்றவர், நீண்டகாலமாக தேங்கியிருந்த சிலகோப்புகளில் கையெழுத்துப் போட்டுவிட்டு, 'இவற்றையெல்லாம் செயற்படுத்தியாக வேண்டும்.

இல்லையென்றால் நடப்பதே வேறு' என்று அதிகாரிகளை எச்சரித்து விட்டு வந்தாராம்! ஒக்டோபர் முதலாம் திகதி நடிகர் சிவாஜிகணேசனின் பிறந்தநாள். அவரதுமணிமண்டபத்துக்கு அரசு சார்பில் சென்று புகழாரம் சூடவும் தவறவில்லை பன்னீர்.

### "என்ன குறைவைத்தேன்?" கொந்தளித்த எடப்பாடி!

ஆனால், என்ன நடந்தாலும் கட்சியையும் ஆட்சியையும் விட்டுக் கொடுக்கத்தயாராக இல்லை எடப்பாடி தரப்பு .'கட்சிக்கு நான்... ஆட்சிக்கு நீங்கள்' என்கிற பன்னீர் கோரிக்கையின் பின்விளைவுகளை அறிந்தேயிருக்கிறாராம் எடப்பாடி.

இடைப்பட்ட நாட்களில் அமைச்சர் ஓ.எஸ்.மணியன், திண்டுக்கல் சீனிவாசன் தொடங்கி பன்னீர் பக்கம் லேசாகச் சாய்ந்த வைத்திலிங்கம் வரைக்குமே பலரது மனதைக் கரைத்திருக்கிறது எடப்பாடி தரப்பு.

முன்னாள் அமைச்சரான மணிகண்டனிடம் ஒரு டீம்பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறது .செயற்குழுவில் பன்னீருக்கு ஆதரவாக எழு ந்த குரல்கள், ஒக்டோபர் 7 ஆம் திகதி எழுந்து விடக் கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருக்கிறார் எடப்பாடி. முதல்வர் வேட்பாளர், கட்சியின் பொதுச்செயலாளர் இரண்டும் தன்கையில் இருந்தால்தான் கட்சி தனது முழுக்கட்டுப்பாட்டிலிருக்கும் என்பது எடப்பாடியின் எண்ணம்.

"இரண்டு மாதத்தில் ஆட்சி கவிழ்ந்துடும் என சொன்ன ஆட்சியை, மூன்றரை வருஷத்துக்கு மேல் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறேன். நான் மட்டும் ஆட்சியை கைவிட்டிருந்தால், உங்கள் நிலைமை என்ன ஆகியிருக்கும்... அதுவுமில்லாமல் உங்களுக்கு என்ன குறை வைத்தேன்.. அம்மா இருந்த போதே மாதாமாதம் கணக்கு கேட்பார்கள்.

அதெல்லாம்கூட நான் கேட்பதில்லை. இதுதான் எனக்கு நீங்கள் காட்டுகிற விசுவாசமா?"என்று அமைச்சர்களிடம் பொங்கிய எடப்பாடி, சில எம்.எல்.ஏக்களிடம் போனைப் போட்டு, "யப்பா... உனக்கு வரவேண்டியதெல்லாம் வந்துகொண்டு தானே இருக்கிறது.. பிறகென்ன அந்தாளோட பேச்சு... எனக்கு ஒன்றும் தெரியாது என்று நினைக்கிறாயா? என்றெல்லாம் கொந்தளித்தாராம். இதற்கிடையே அமைச்சர்கள் வேலுமணியும் தங்க மணியும் ஒவ்வொரு மாவட்டச் செயலாளருக்கும் போனைப் போட்டு எடப்பாடிக்காகப் பேசி வருகிறார்கள்.

### ரசிக்கும் பா.ஜ.க!

தமிழகத்தில் நடக்கும் இந்த அதிகாரப்போர், டில்லி பா.ஜ.க. தரப்பைஉற்சாகமாக்கியிருக்கிறது.' நன்றாக மோதட்டும்' என்று ரசித்தபடியே மோதலை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது பா.ஜ.க.

ஒக்டோபர் 17 ஆம் திகதி நவராத்திரி ஆரம்பமாகிறது. அடுத்த 16 நாட்களுக்கு நவராத்திரி சீஸன் நடக்கும்.ஆர்.எஸ்.எஸ்.சார்பில் அந்த நாட்களில் நாக்பூர் தலைமையகத்தில் பா.ஜ.க.மற்றும் ஆர்.எஸ்.எஸ் தலைவர்கள் கூடுவார்கள். அடுத்த ஒருவருட காலத்தில் எடுக்கப்பட வேண்டிய முக்கிய அரசியல் முடிவுகளும் அங்கு ஆலோசிக்கப்படும். அந்த வகையில், நாக்பூரில் தமிழக சட்டமன்றத் தேர்தல்பற்றிய முக்கிய முடிவுகளை எடுக்கப்போகிறார்களாம்.

அதுவரை, தமிழக அரசியலில் அ.தி.மு.க - தி.மு.க - காங்கிரஸ் என்று மூன்று கட்சிகளுக்குள்ளும் குழப்ப அலைகளைப் பரவவிடுவதே பா.ஜ.கவின் திட்டம். அதேசமயம், அ.தி.மு.கவில் அவர்களின் சொய்ஸ் சசிகலாவா, பன்னீர்செல்வமா, பழனிச் சாமியா என்பதெல்லாம் நவம்பரில்தான் தெரியவரும் என்கிறார்கள். இதற்குத் தகுந்தாற்போல், பா.ஜ.க. மேலிடம் தேசிய பொதுச் செயலாளராக இருக்கும் பூபேந்தர் யாதவை தமிழ்நாடு தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கவிருக்கிறது.

### வருகிறார் சுசீல் சந்திரா

மத்திய நிதித்துறையின் கட்டுப்பாட்டிலிருக்கும் நேரடிவரிகள் ஆணையத்தின் தலைவராக இருந்தவர் சுசீல் சந்திரா. இவர் பதவியிலிருந்த காலத்தில்தான் தமிழகத்தில் ஏராளமான வருமான வரித்துறை ரெய்டுகள் நடந்தன.

ஜெயலலிதா வீட்டில் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் உள்ளிட்ட பல விபரங்களை விரல்நுனியில் வைத்திருக்கிறார் சுசீல். தற்போது மத்திய தேர்தல் கமிஷனர்களில் ஒருவராக இருக்கும் இவர், விரைவில் தலைமைத் தேர்தல் கமிஷனராக நியமிக்கப்படுவார் என்று தெரிகிறது.

இவர்தான் தமிழக சட்டமன்றத் தேர்தலையும் முன்னின்று நடத்தப் போகிறார். வருமானவரித்துறை யில் அவர் இருந்த போது கிடைத்த விடயங்களையெல்லாம் தேர்தல் நேரத்தில் கையிலெடுப்பார் என்கிறது டில்லி வட்டாரம்!

### பன்னீர்-தினகரன் உடன்படிக்கை!

"அ.தி.மு.க - அ.ம. .க இணைப்புக்காகவே தினகரன் கடந்த வாரம் டில்லியில் பா.ஜ.க.தலைவர்களைச் சந்தித்தார்' என்கிறார்கள். இது தொடர்பாக பன்னீர்-தினகரனிடையே உடன்பாடும்' ஏற்பட்டு விட்டதாம்.

ஆனால், கட்சியின் தலைமைப் பதவி தனக்கு வேண்டும் என்பது பன்னீரின் கோரிக்கை . இது குறித்து பெங்களூர் சிறையிலிருக்கும் சசிகலாவுக்கு தகவல் அனுப்பி ஆலோசிக்கப்பட்டும் விட்டதாம்.சசியும் இதற்கு பச்சைக்கொடி காட்டி விட்டார் என்கிறது தினகரன்முகாம்.

ஜூனியர் விகடன்

# நாட்டில் மீண்டும் கொரோனா அச்சம்

## முன்பள்ளிகளை மூடத் தீர்மானம்



(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாட்டில் உள்ள அனைத்து முன் பள்ளிகளையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இன்று திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை நாட்டில் உள்ள அனைத்து முன்பள்ளிகளையும் மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கம்பஹா- திவுலபிடிய பகுதியில் வசித்து வரும் 39 வயதுடைய பெண் ஒருவருக்கு, கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## கடைகளில் குவியும் மக்கள்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள கடைகளில் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக மக்கள் முண்டியடித்தனர்.

கம்பஹா மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து இவ்வாறு பொருட்களை கொள்வனவு செய்வதற்கு மக்கள், கடைகளில் குவிந்துள்ளனர்.



கம்பஹா- திவுலப்பிடிய பகுதியில் பெண் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்று ஞாயிற்றுக்கிழமை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், கம்பஹாவின் சில பகுதிகளில் ஊடரங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே மக்கள் இவ்வாறு அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்ய கடைகளில் குவியத் தொடங்கியுள்ளனர். (ஜ-4)

## போக்குவரத்து கட்டுப்பாடு

(கொழும்பு)

அனைத்து அரச மற்றும் தனியார் பேருந்துகளிலும் பயணிப்பதற்கு அரசாங்கம் கட்டுப்பாடு விதித்துள்ளது. இதன்படி, பொதுப் போக்குவரத்தில் ஆசன எண்ணிக்கைக்கு மட்டுமே பயணிகளை ஏற்றிச்செல்ல முடியும் என தெரி வித்துள்ளது.




உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த விடயம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## கைதிகளை பார்வையிடத் தடை

(கொழும்பு)

நீர்கொழும்பு மற்றும் மகர சிறைச்சாலைகளுக்கு பார்வையாளர்கள் செல்வதற்கு மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.



கம்பஹா- திவுலபிடிய பகுதியில் வசித்து வரும் 39 வயதுடைய பெண் ஒருவருக்கு, கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2134

### லாவன்யன்

உதவியோ? துரோகமோ? நீ... ஒருவருக்குச் செய்தால்...



நிச்சயம் இன்னொருவர் மூலம் வந்தே தீரும்.

### தனுஜன்



வாழ்க்கை என்பது மிகப்பெரிய எதிர்பார்ப்புகளில் இல்லை. சின்னச் சின்ன சந்தோசங்களில் தான் உள்ளது.


### சமீரா

நாம் பழகும் விதமே நம்மை விரும்பச் செய்யும்!



### ஸ்ரெல்லா

நேரத்தை வீணாக்காதே! உன்னால் முடியும்! சாதித்து கொண்டே இரு வாழ்வில்.



### கோபிதன்

தூய்மையான எண்ணங்கள் துனிச்சலான செயல்கள்



இவ்விரண்டும் எப்போதும் இருப்பின் வாழ்க்கை சிறக்கும்.

### சிவா



விடியல் என்பது கிழக்கில் அல்ல. நம் உழைப்பில்!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



# ஆன்மீகம்

## இலக்கு நிச்சயித்து உறுதியாய்ப் பயணிப்போம்!

(சனிக்கிழமை தொடர்ச்சி)

வீரத்துறவி விவேகானந்தர் கூறுகின்றார்: 'துரதிர்ஷ்டவசமாக நம்மவர்களில் பெரும்பாலோருக்கு இலட்சியம் என்ற ஒன்றே கிடையாது. இலட்சியத்தோடு வாழாதவர்கள் ஐம்பதாயிரம் தவறுகளைச் செய்வார்கள் என்று நான் உறுதிபடக் கூறுவேன்' இதுதான் பாதை! இதுதான் பயணம்! என்று இலக்கை நிர்ணயித்துக் கொண்டு நாம் வாழ வேண்டும்.

சபல புத்தியுடைய ஒருவன் சாமியாராக ஆக வேண்டும் என்று விரும்பிச் செயற்பட்டால் குற்றங்கள்தானே நிகழும்! பணக்காரனாக ஆக வேண்டும் என்று ஆசைப்படும் ஒருவன் அதற்கான தொழில் முயற்சிகளைத் தேர்ந்தெடுத்து உழைக்காமல், பொது வாழ்வில் ஈடுபட்டால் பொல்லாங்குகள்தானே நிகழும்! பாதை மாறிப் பயணம் செய்பவர்கள் இப்போது பல துறைகளிலும் பல்கிப் பெருகிவிட்டார்கள். மேலும் பலர் இறங்குமிடம் எது என்று நிச்சயிக்காமலே பயணம் மேற்கொண்டு விடுகிறார்கள். 'விதையினைத் தெரிந்திடு' என்று தன் புதிய ஆத்திசூடியில் புகல்கின்றார் பாரதியார். விவசாய சாகுபடிக்காக சொன்னதுதான் 'விதையினைத் தெரிந்திடு' என்று எண்ணி விடாதீர்கள். வீரியம் பெருக்கு, வேதம் புதுமை செய், வையத் தலைமை கொள் என்னும் வரிசையில்தான், 'விதையினைத் தெரிந்திடு' என்கிறார் பாரதியார்.

உழுது பண்படுத்தாத நிலத்தில் முட்செடிகளும், சப்பாத்திக்கள்ளியும், எருக்கஞ்செடிகளும்தான் வளரும். அதுபோல்தான் ஏற்ற லட்சியத்தை ஏற்காத மனத்தில் காமமும் தீக்குணங்களும் வக்கிரமும்தான் வளரும். இதுதான் என் இலக்கு என்று விதையினைத் தேர்வு செய்து நெஞ்ச நிலத்தில் இளமையிலே பயிர் செய் என்கிறார் பாரதியார். பக்கவாட்டை எல்லாம் பார்க்காது நாம் ஏற்றுக்கொண்ட லட்சியப் பாதையிலேயே வீறு நடை போட வேண்டும் நம் மனக்குதிரை. பாரதத்தில் கேரளத்தில் காலடியில் பிறந்து, தன் காலடியால் பாரதத்தையே வலம் வந்து அத்வைத சித்தாந்தத்தைப் பரப்பிய ஞான முதல்வர் ஆதிசங்கரர். இளமையிலேயே துறவறத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற இச்சையிலேயே இருந்தார். ஆனால், அவரைப் பெற்றெடுத்த தாய் ஆர்யாம்பாளோ பையனுக்குக் கல்யாணம் செய்வித்துக் கண்குளிரப் பார்க்க வேண்டும்.பேரன், பேத்திகளுடன் தன் முதுமைக்காலம் மகிழ்ச்சியாகக் கழிய வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இருந்தாள்.

ஆதிசங்கரர் தன் இலட்சியப்படி துறவறம் மேற்கொள்ளாமல் "அன்னை சொற்படி குடும்பஸ்தர் ஆகியிருந்தால் அவர் மனைவி என்ன பாடுபடுவாள்?" அவர் பாதை மாறிப் பயணம் செய்யவில்லை. விதையினைத் தெரிந்திடு என்ற வாக்கிற்கிணங்க ஏற்றுக்கொண்ட துறவறத்தைத் தாய் மூலமே பெற்றார். எப்படி? ஒருநாள் ஆதிசங்கரர் தன் அன்னையார் வழக்கமாக நீராடும் ஆற்றுக்குத் தாயாருடன் வந்தார். தாயும் மகனும் மகிழ்ச்சியுடன் குளிர்நீரில் குளித்தபடி குதூகலம் அடைந்தனர். முதுமை வயது வந்துவிட்டதால் ஆர்யாம்பாளால் அதிக நேரம் நீராட முடியவில்லை. குளித்துக் கரையேறி ஆடைகளைப் பிழிந்தாள். நதியில் விளையாடி நீந்திக் கொண்டிருந்த இளம் வயது சங்கரரோ 'அம்மா, காப்பாத்து.. காப்பாத்து...' என்று திடீரென்று அலறத் தொடங்கினார்.

**'என்னடா குழந்தை, என்ன ஆச்சு?'**
**பெற்ற வயிறு பதைபதைத்தது.**
**'அம்மா, என் காலை முதலை ஒன்று கவ்விப் பிடித்து விட்டது!'**

திடுக்கிட்டாள் ஆர்யாம்பாள். செய்வதறியாது அலறினாள். வாழ வேண்டிய இளம்பிள்ளை. விதி இந்த முதலை ரூபத்தில் வந்து விட்டதே! வயதான என் உடல் காலைக் குளிரில் நடுங்கிக் கொண்டிருக்கிறது. என்னால் எப்படி சங்கரனைக் காப்பாற்ற முடியும் என்று எண்ணிய ஆர்யாம்பாள் அலறினாள். கூப்பாடு கேட்டு பலர் கூடிவிட்டார்கள். குழந்தையின் காலைப் பற்றிய முதலையின் வாய் இப்போது அவன் தொடைவரை வந்துவிட்டது. 'அம்மா! நீதான் காப்பாத்தணும்' அலறினார் சங்கரர். 'நான் என்னடா செய்ய முடியும்? கதறினாள் ஆர்யாம்பாள். 'இந்தப் பிறவியிலே முதலை விழுங்கி நான் சாகணும் என்று இருக்கிறது. நான் இப்பிறவி நீங்கி அடுத்த பிறவி எடுத்தா இந்த ஆபத்து நீங்கிடும்' என்றார் சங்கரர். "நீ என்ன சொல்றேன்னு புரியலையே!" என்று குழம்பிய தாயாரிடம் சங்கரர் விளக்கமாகச் சொன்னார். "நான் துறவறம் மேற்கொள்ள அனுமதி தாருங்கள். சந்நியாசி ஆகி விட்டால் இந்த பிறப்பின் தொடர்புகள் அற்றுப் போகும்.

சந்நியாசியாக நான் மாறினால் அது இன்னொரு பிறப்பைப் போல. நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்." "எப்படியோ நீ பிழைச்சா போதும். துறவறத்துக்கு உன்னை அனுமதிக்கிறேன்" என்றாள் அம்மா. அன்னையாரின் பூரண ஆசி பெற்று, முதலையின் பிடியிலிருந்து விடுபட்டு, குடும்ப பந்தத்தினின்று நீங்கி தன் இலட்சியத்தில் வெற்றி பெற்றவராகி சங்கரர் கரையேறினார். தாய் சொல்லைத் தட்டக்கூடாது என்பது பொதுவான அறம்தான். ஏற்றுக்கொண்ட இலட்சியத்திலிருந்து எவர் சொன்னாலும் தடுமாறி விடக்கூடாது என்பதே போற்றத் தகுந்த அறம்.

மும்பை நகரம் செல்ல தீர்மானித்த ஒருவன் முத்துநகர் விரைவு வண்டியில் ஏறலாமா? இலக்கை நிர்ணயித்து நாம் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்தால் கவியரசர் கண்ணதாசன் சொல்வது போல், "நாம் வாழ்ந்த வாழ்க்கை நலமாகும்! இல்லை யென்றால் ஏன் வாழ்ந்தாய் என்றே இறைவன் நம்மை கேட்பான்."

# செய்தித்துளிகள்

## இந்தியக்கடல் பாதுகாப்பு வீரர்களுக்கு கொரோனா

(கொழும்பு)

காலி - தெவட்ட பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இந்தியாவை சேர்ந்த கடல் பாதுகாப்பு வீரர்கள் மூன்று பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாக காலி மாவட்ட தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் மருத்துவ அதிகாரி தெனுர கே.சிங்காராச்சி தெரிவித்துள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த 14 கடல் பாதுகாப்பு வீரர்கள் கடந்த 29 ஆம் திகதி இலங்கை வந்துள்ளனர். இவர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை நடத்தப்பட்டதுடன், அவர்களில் ஒருவருக்கு கொரோனா தொற்றியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து ஏனைய 13 பேர் தெவட்ட பிரதேசத்தில் உள்ள ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்டனர். இவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் மேலும் இருவருக்குக் கொரோனா தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஜ-4)

++++++++++++++++++++++++

# கைதுகள்

## துப்பாக்கி ரவைகளுடன்...

(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்தெமுல்ல பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் வெவ்வேறு வகையான துப்பாக்கி ரவைகளுடன் சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் 255, 9 மில்லி மீற்றர் அளவிலான துப்பாக்கி ரவைகள் 4 மற்றும் மைக்ரோ ரகத் துப்பாக்கி ரவைகள் 3 ஆகியன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

++++++++++++++++++++++++

## குடுவுடன்...

(கொழும்பு)

கலஹா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நில்லம்பை பகுதியில் போதைப் பொருளுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்:

அவரிடம் இருந்து 1 கிராம் 380 மில்லி கிராம் போதைப் பொருள் (குடு) கைப்பற்றப்பட்டுள்ளது.

கலஹா பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலை அடுத்து, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் மாகேதவின் வழிகாட்டலுடன் நேற்று முன்தினம் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போதே ஒருவர் கைது செய்யப்பட்டார். இச்சம்பவம் தொடர்பில் கலஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

++++++++++++++++++++++++

## துப்பாக்கிகளுடன்...

(கொழும்பு)

ருவன்வெல்ல மற்றும் பரயானளங்குளம் பகுதிகளில் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் ஐந்து உள்நாட்டுத் துப்பாக்கிகள் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.


ருவன்வெல்ல - நிக்கவலமுல்ல பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 3 உள்நாட்டுத் துப்பாக்கிகளுடன் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதான சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ருவன்வெல்ல பொலிஸ் பிரிவில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளில் குருபெத்த பகுதியில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் 41 வயதான மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஜ-4)



# சிறுவர் அரங்கம்

## ஒட்டகத்தின் கழுத்து ஏன் கோணலாக உள்ளது



ஒருநாள் பீர்பாலின் சாதுரியமான உரையாடலைக் கேட்டு பீர்பாலுக்கு ஒரு கிராமத்தைப் பரிசளிப்பதாக அக்பர் வாக்களித்தார்.

பிறகு அக்பர் தான் கூறியதை மறந்து விட்டார். பீர்பால் பலமுறை நினைவுபடுத்தியும் அக்பர் அதை நிறைவேற்றவில்லை.

பீர்பால் அக்பருக்கு தக்க படிப்பினை புகட்ட வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தார்.

ஓர்நாள் இருவரும் உரையாடிக்கொண்டிருக்கும் போது அக்பர் பீர்பால் ஏன் ஒட்டகத்தின் கழுத்து கோணலாகவும் அவலட்சணமாகவும் இருக்கிறது? என்று கேட்டார்.

இதுதான் தருணம் என்று எண்ணிய பீர்பால், அரசே... அவை முற்பிறவியில் யாருக்காவது இலவசமாக கிராமங்களை பரிசளிப்பதாகக் கூறிவிட்டு தம் வாக்குறுதியை மறந்திருக்கும் என்றார்.

பீர்பாலுக்கு தான் கொடுத்த வாக்கு அப்போது தான் நினைவுக்கு வந்தது. அதனைப் புரிந்து கொண்ட அக்பர், உடனே பீர்பாலின் பெயருக்கு ஒரு கிராமத்தை எழுதிக் கொடுத்தார்.

## வாசிப்பு மாதம் ஒக்டோபர்-2020

## ஆனந்தமாக வாழ்வோம்

❖ அற்புதமான இயற்கையும் எழிலான பசுமையும் நிறைந்த நல்ல உலகில் வாழும் நாங்கள் தினமும் தெய்வத்தை வணங்கி பெற்றோர் மற்றும் ஆசிரியர் அறிவுரை கேட்டு நடப்போம்.

❖ பாடங்களை ஒழுங்காகப் படிப்பதுடன் நல்ல பழக்க வழக்கங்களைப் பழகி வீட்டில் தோட்டமொன்றினையும் வைத்து, நீர், மின்சாரம் உட்பட ஏனைய வளங்களையும் அளவோடு பயன்படுத்தி ஆனந்தமாக வாழ்வோம்.

❖ பெரியவர்களை மதித்து அக்கா, அண்ணா, தம்பி,தங்கை என எல்லோரிடமும் அன்பு செலுத்தி பறவைகள், விலங்குகளை நேசித்து அமைதி பேணுவோம்.

❖ எப்போதும் எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் சிரித்துக் கதைத்து எவரையும் துன்புறுத்தாமல் யாருக்கும் தீங்கு செய்யாமல் என்றும் இன்பமாக வாழ்வோம்.

ச.கதீசன், யாழ். இந்துக் கல்லூரி

## மருத்துவப் பழமொழிகள்

❖ கருந்துளசி இலையின் சாறு கயத்தைப் போக்கும்
கவலையால் நாடியெல்லாம் தழலாய் வேகும்

❖ சுக்குநீர் தன்னிற் கொள்ள சுகமுடன் வெதுப்புத்தீரும்;
தக்கசீரகம் கிராம்பு தனிவிட தாகம் தீரும்

❖ செம்பட்டை மாற தாமரைப் பூ கஷாயம்

❖ சீதபேதிக்கு தயிரில் அரைத்த கறிவேப்பிலை

❖ தலைமுடியின் கருமை நிறத்தில்
கறிவேப்பிலைக்கு பங்கு உண்டு

தொகுப்பு: புத்தூர் பொது நூல் நிலையம்

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## குடி உயரக் கோன் உயரும்

44



பழங்கால உணவு முறைகள்

மா, பலா, வாழை போன்ற பழங்களை மக்கள் மிகவும் விரும்பி உண்டார்கள்.

விதவிதமான கள் வகைகளை மக்கள் குடித்தார்கள். கள் வகைகள் ஜாடிகளில் ஊற்றிப் பதமிடப்பட்டுப் பின்னர் பானமாக வழங்கப்பட்டன. பெண்களிடமும் கள் குடிக்கும் பழக்கம் இருந்தது. மனைமேல் அமர்ந்து உணவு உண்ணும் பழக்கம் கடைப்பிடிக்கப்பட்டது.

உணவில் நெய், தயிர், காய்கறிகள், பழங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. காய்கறிகள் பொரித்தும் அவித்தும் உண்ணப்பட்டன. வறுத்த உணவுகளும் பயன்பாட்டில் இருந்தன.

சரியான விகிதங்களில் புரதம், மாவுச்சத்து, கொழுப்பு, விற்றமின்கள் ஆகியவை சேர்ந்த சத்துணவு, காலை நேர உணவாக இருந்தது.

வெற்றிலையும் பாக்கும் உணவுக்குப் பிறகு பரவலாகப் பயன்படுத்தப்பட்டன.

சோழர் காலக் கல்வெட்டுக்களில் சர்க்கரைப் பொங்கல் (அக்கார வடிசில்), பணியாரம் ஆகிய உணவு வகைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

வாழைப்பழம், பருப்பு, மிளகு, சீரகம், சர்க்கரை, நெய், புளி, தயிர், கொள்ளு, உப்பு, வாழையிலை, வெற்றிலை, பாக்கு, சிதாரி, கற்பூரம், விறகு, பழைய அரிசி ஆகிய பொருட்களின் விலைகளும் கால்நடைகளின் விலைகளும் கட்டுப்பாட்டுக்குள் இருந்தன.

சமையல் கலையை விளக்கும் மடைநூல் எழுதப்பட்டு அது மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

### நம்பிக்கைகள்

நல்ல நாள் பார்த்து ஒரு காரியத்தைத் தொடங்கும் வழக்கம் கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டது. மக்கள் எந்நேரமும் சகுணம் பார்த்தார்கள். கட்டாயமாகக் குழந்தைகளுக்கு ஜாதகம் கணித்தார்கள்.

விடியற்காலைக் கனவு பலிக்கும் என்றும், ஆண்களுக்கு இடக்கண் துடிப்பது நல்லது என்றும் பகலில் கோட்டான் கூவினால் நிச்சயம் கேடு வரும் என்றும் தும்மினால் நல்லது நடக்கும் என்றும் மக்கள் நம்பினார்கள்.

ஐப்பசி மாதம், அஸ்வினி நாளில் பிறந்து வளர்ந்த குதிரைகள் தரமானவை என்கின்ற அளவில் குதிரைகளின் வணிகம் நடைபெற்றது. வீட்டுத் தலைவன் வெளியூர் செல்லும் போது அவருடைய மகன் அறுபது அடி தொலைவில் நிற்பான். மனைவி இருபதடி தொலைவில் நிற்பார்.

(தொடரும்)

குற்றம் புரிந்தவனைத் தூக்கிலிடாதே;
அவன் குற்றங்கள் புரிவதற்கான
காரணங்களைத் தூக்கிலிடு. – ரூசோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கஞ்சாவுக்கும் மஞ்சளுக்குமாக மானிடத்தைக் கொல்லும் மடையர் காள்

உலகம் முழுவதையும் ஆட்டிப்படைத்து நிற்கும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து இலங்கை ஓரளவுக்குத் தப்பிப் பிழைத்துள்ளது என ஆறுதல் அடைந்திருந்த வேளையில்,

இலங்கையில் மீண்டும் சமூகத் தொற்று ஏற்பட்டுள்ளதான தகவல் அச்சம் தருவதாகும்.

உலகில் வல்லரசு நாடுகள் முதல் வறிய நாடுகள் வரை கொரோனாவுக்குத் தப்பவில்லை என்பது பொதுவான கருத்து.

இந்நிலையில் கொரோனாத் தாக்கம் இலங்கையில் மிகமிகக் குறைவு என்று கூறக்கூடிய அளவில், கொரோனாக் கட்டுப்பாடு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

தனிமைப்படுத்தப்பட்டவர்களில் சிலருக்கு கொரோனா ஏற்பட்டதான பதிவுகளைத்தவிர, சமூகத் தொற்று இனங்காணப்படவில்லை.

இதனால் பாடசாலைகள் வழமைபோல இயங்கின.

சகல நிறுவனங்களும் ஒழுங்காகச் செயற்பட்டன.

ஆனால் நேற்றைய தினம் (04.10.2020) கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகி இருப்பது உறுதி செய்யப்பட்ட நிலையில்,

கொரோனா அச்சம் மீண்டும் தலைதூக்கியுள்ளது.

கம்பஹாவில் ஏற்பட்ட கொரோனா சமூகத் தொற்றுக்கான காரணம் கண்டறியப்பட வேண்டுமாயினும்,

அண்டை நாடான இந்தியாவில் கொரோனா கட்டுக்கடங்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலையில்,

மனித உயிர்களை விற்று இலாபம் உழைக்கக்கூடிய கயமை கொண்டவர்கள் இந்தியாவில் இருந்து கஞ்சாவையும் மஞ்சலையும் கடத்தி வருகின்ற நிட்டூரம் தொடர்கிறது.

இதனால் கொரோனாத் தொற்று எங்கள் நாட்டில் பரவுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகவே உள்ளன.

எனினும் மேற்குறித்த கடத்தல்காரர்கள் சொல்லுக் கேட்பதாக இல்லை.

அவர்கள் இந்திய எல்லைக்குள் செல்வதும் கடற்றொழிலுக்கு வருகின்ற இந்திய மீனவர்களுடன் கடத்தல் தொடர்பை வைத்திருப்பதுமான செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இத்தகைய மோசமானவர்களால் மானிடம் அழிவை எதிர்நோக்கியுள்ளது.

எனவே கொரோனாத் தொற்றில் இருந்து நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இதற்காக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதே ஒரே வழியாகும்.

அமெரிக்காவில், இத்தாலியில், இந்தியாவில், பிரான்ஸில் என உலக நாடுகளை உலுப்பி வரும் கொரோனாவில் இருந்து அனைவரும் மீண்டெழ இறைவனையும் வேண்டுதல் செய்வோமாக.

### 20 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால்

# புதிய அரசியலமைப்புக்கான தேவை அரசாங்கத்துக்கு ஒருபோதும் ஏற்படாது

## சுமந்திரன் எம்.பி சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

20ஆவது அரசியலமைப்பிற்கு வாக்களிக்காது எதிர்க்க, தமிழ் மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்ட ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தமிழ் மக்கள் வேண்டுகோள் விடுக்க வேண்டும். அத்துடன், 20ஆவது திருத்த சவாலை முறியடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற "இலங்கையில் அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம்" ஆய்வரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஏன் இவ்வளவு அவசரமாக கொண்டு வரப்படுகின்றது என்பதற்கான பதில் என்னிடம் இருக்கின்றது.

எதிர்வரும் நவம்பர் மாதம் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களின் காலம் நிறைவடைகின்றது. நிறைவடைந்த பின்னர், தற்போதுள்ள அரசியலமைப்பின் படி நியமிக்கப்பட வேண்டும். அதற்கு முன்னர் இந்த 20ஆவது அரசியலமைப்பை உருவாக்கினால், தமது கட்சிக்குள் உள்ளவர்களை தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்க முடியும் என்பதற்காக இந்த அவசர நடவடிக்கைகள் எடுப்பதாக குற்றஞ்சாட்டியதுடன், இவ்வாறு மூன்று உறுப்பினர்களையும் கட்சியில் இருந்து நியமித்தால், அது பாரிய திருப்பத்தை நாட்டில் ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டினார்.

நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல்கள் கடந்த சில காலங்களில் நடந்திருந்தன. அவர்களின் கட்சிக்குள் இருந்தும், இந்த 20ஆவது திருத்தத்திற்கு எதிராக எதிர்ப்புகள் இருந்தும் கூட, 18ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்ட போது, ஜனாதிபதியாக இருந்தவர் ஒரு பழுத்த அரசியல்வாதி. இன்று நிலைமை அப்படி இல்லை. 20ஆவது திருத்தம் எமது ஜனநாயகத்திற்கு விரோதமானது. 17ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக, தேர்தல் விஞ்ஞாபனத்தில் கோட்டாபய அரசு சொன்னது உண்மை. 19ஆவது திருத்தத்தை அகற்றுவோம் என்பதற்கு, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை வலுவானதாக்குவதற்கு நிறைய வித்தியாசம் உள்ளது.

ஒட்டுமொத்தமாக, 20 ஆவது திருத்தத்தை எதிர்க்கும் மனநிலையில் தான் இருக்கின்றார்கள், அது நல்ல விடயம். இதில் எமது எதிர்ப்பு பல மட்டங்களில் இருக்க வேண்டும். 20ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவதை தவிர்ப்பதற்கு, நாங்கள் பலமாக செயற்பட வேண்டும். 20ஆவது திருத்த சட்டத்தை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துடன், அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் தமிழ் மக்கள் கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும்.

எமது பிரதேசங்களில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவாகிய ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். இந்த ஜனநாயக விரோத தன்மையை எண்ணிக்கையில் சிறுபான்மை இனமாக உள்ளவர்களுக்கு மேல் எழுந்துள்ள இந்த பாரிய சவாலை, வெவ்வேறு காரணங்களுக்காக அவர்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியிருக்கலாம். ஆனால், இந்த விடயத்தில், வாக்களிக்க கூடாது என பகிரங்க வேண்டுகோளை மக்கள் விடுக்க வேண்டும்.

மக்கள் அந்த உடன்பாட்டை எடுக்க வேண்டும். மக்கள் அவர்களுக்கு வலியுறுத்த வேண்டும். புதிய அரசியலமைப்பு இந்த நாட்டிற்குத் தேவையானது. ஆனால், புதிய அரசியலமைப்பை புறந்தள்ளி, 20ஆவது திருத்தத்தை கொண்டு வருவதை ஏற்றுக்கொள்ள முடியாது. 20ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், புதிய அரசியலமைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். எமக்கான இனப்பிரச்சினைத் தீர்வுகள் உள்வாங்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் அபிலாசைகள் வென்றெடுக்கப்பட வேண்டும் என அண்மையில் ஒரு வாக்குக்கொடுத்தார்கள். இந்திய பிரதமருடன் கூட்டாக வெளியிட்ட அறிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார். (ஞா -06,10,101)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## சோஷலிசம்



ஒவ்வொரு மனிதனும் பிறக்கிறான், வளர்கிறான், வாழ்கிறான், முடிந்து விடுகிறான். மனித சமுதாயமோ தொடர்ந்து நீடித்து வருகிறது. ஒவ்வொரு மனிதனையும் உருவாக்கி, வளர்த்து, அறிவு ஊட்டி, தொழில் திறம் காட்டி, வாழ்விற்கு வேண்டிய பொருட்கள், வசதிகள் அனைத்தையும் அளித்துக் காத்து வாழவைக்கிறது சமுதாயம். எனவே, ஒவ்வொரு தனி மனிதனும் தனக்கு வாழ்வளிக்கும் சமுதாய நலனுக்கே தன் அறிவு, உடல் ஆற்றல்களைப் பயன்படுத்தி வாழ வேண்டும். இவ்வாறு தனி மனிதன் தன் கடமையுணர்ந்து வாழவேண்டுமென்ற தெளிவும், பொறுப்புணர்வும் கொண்டு வாழ ஏற்றது சமுதாயம் என்பதை சொசைட்டி" (Society) என்று வழங்குகிறோம். சொசைட்டியின் நலனை முன் வைத்து ஒவ்வொரு மனிதனும் வாழும் நெறி (Ism) தான் சோஷலிசம்.

பொருட்களும், பாலுறவும் தான் மனிதனின் அடிப்படைத் தேவைகள். இவற்றைப் பிறர்க்கோ, தனக்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, அறிவிற்கோ, உடல் உணர்ச்சிக்கோ, துன்பம் எழாத அளவோடு, முறையோடு துய்க்கும் ஒழுக்கமும், பிறர்க்கு ஒத்தும் உதவியும் வாழும் ஈகையும் கடமையும் இணைந்த தொகுப்புக் கருத்து "அறம்" ஆகும். உடல், உயிர், அறிவு, மெய்ப்பொருள் என்ற நான்கு நிலைகளை உணர்ந்து கொள்ளும் அறிவின் முழுமைப்பேறு தான் வீடு பேறு அல்லது மெய் விளக்கமாகும். இறைநிலை விளக்கமும் இதுவே.

மனிதன் இறைநிலையுணர்ந்து, அறவழி கண்டு, பொருட்களையும், பாலுறவையும் துய்த்து வாழ்ந்தால் தான் தனி மனிதனிடத்திலும் சமுதாயத்திலும் அமைதி நிலவும். இதனால் மெய்விளக்கம் பெறும் வழியை இறைவழிபாடாகவும், அறநெறியினை உயிர்வழிபாடாகவும் வைத்து வாழ்க்கை நெறியினை முன்னோர்களான பேரறிஞர்கள் வகுத்துக் காட்டியுள்ளனர். இத்தகைய மனித வாழ்வின் நன்னெறியே "மதம்" என்ற பேரால் வழங்கப் பெறுகின்றது. அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நான்கும் தேவைகளாக மனிதனுக்கு மலர்ந்தன.

# அதிரடி காட்டிய விராட் - படிக்கல்

## ராஜஸ்தானை சுருட்டியது பெங்களூர்

ஆர்சிபி - ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் அபுதாபியில் நேற்று நடைபெற்றது. முதலில் பட்டிங் செய்த ராஜஸ்தான் ரோயல்ஸ் 6 விக்கெட் இழப்பிற்கு 154 ரன்கள் அடித்தது.

பின்னர் 155 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆர்சிபி அணி பட்டிங் செய் தது. ஆரோன் பிஞ்ச், தேவ்தத் படிக்கல் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

ஆரோன் பிஞ்ச் 3 ஓட்டம் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து படிக்கல் உடன் விராட் கோலி ஜோடி சேர்ந்தார். தேவ்தத் படிக்கல் தனது வழக்கமான ஆட்டத்தை வெளிப்படுத்த, முதல் மூன்று போட்டியில் சொதப்பியதால் விராட் கோலி கவனமாக விளையாடினார்.

ஓவர் செல்ல செல்ல விராட்-படிக்கல் ஜோடி அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். படிக்கல் 37 ஆவது பந்தில் அரைச்சதம் அடித்தார்.



நான்கு போட்டிகளில் 3 ஆவது அரைச்சதம் இதுவாகும். மறுமுனையில் விராட் கோலி 41 பந்தில் அரைச்சதம் அடித்தார். அணியின் ஸ்கோர் 15.5 ஓவரில் 124 ஓட்டங்களாக இருக்கும் போது படிக்கல் 63 ஓட்டத்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து டி வில்லியர்ஸ் களம் இறங்கினார். விராட் கோலி 18 ஆவது ஓவரில் மூன்று பவுண்டரிகள் விளாச, 19.1 ஓவரில் 158 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூர் அபார வெற்றி பெற்றது.

விராட் கோலி 53 பந்தில் 72 ரன்களுடனும், டி வில்லியர்ஸ் 10 பந்தில் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். (4)

# வடமாகாண பிறீமியர் லீக் யாழ். அணி பிரமாண்ட வெற்றி




வடமாகாண துடுப்பாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் "வடமாகாண பிறீமியர் லீக்" சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று சிறப்பாக ஆரம்பமா னது.


கடந்த மாதம் ஆரம்பித்த இச்சுற்றுப்போட்டியில் வடக்கை சேர்ந்த ஐந்து மாவட்டங்களின் அணிகள் பங்குபற்றியிருந்தன. 20 பந்துப் பரிமாற்றங்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட இப்போட்டியில் இறுதிப்போட்டிக்கு தெரிவாகிய யாழ் மற்றும் முல்லைத் தீவு மாவட்ட அணிகள் மோதிக் கொண்டன.

இப்போட்டியில் யாழ் கிளாடியேட்டர்ஸ் அணியை எதிர்த்து முல்லை பந்தஸ் மோதியிருந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். கிளாடியேட்டர்ஸ் அணியினர் முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்து 20 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களை குவித்தது. 192 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய முல்லை பந்தஸ் அணியினர் 12.3 பந்து பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்று 138 ஓட்டங்கள் வித்தியாசத்தில் யாழ். அணியிடம் தோல்வி அடைந்தது. முதலாவது இடத்தை பெற்ற யாழ். கிளாடி யேட்டர்ஸ் அணியினர் 2 இலட்சம் பணப் பரிசையும் கிண்ணத்தையும் சுவீகரித்த தோடு 2 ஆம் இடத்தை பெற்ற முல்லை அணிக்கு 1 இலட்சம் பணப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டது. (4-299)

# ஐ.பி.ல் தொடருக்குப் பின்னர் டோனியின் அடுத்த திட்டம்

## கூறினார் மனைவி சாக்ஷி



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடருக்கு பின்னர் டோனியின் திட்டம் என்ன என்பது குறித்து அவர் மனைவி சாக்ஷி தகவல் வெளியிட்டுள்ளார்.

ஐ.பி.எல்.போட்டி முடிந்த பின் டோனி சினிமா துறையை தேர்வு செய்யவுள்ளதாக தகவல்கள் சில வெளியாகின.

இது குறித்து சாக்ஷி கூறுகையில், வருங்காலங்களில் வெப் தொடர் ஒன்றை டோனி என்டர்டெயின்மெண்ட் நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கவுள்ளோம்.

மேலும் வெப் தொடர்களில் நடிக்கும் நடிகர் மற்றும் நடிகை பெயர்களை பின்பு அறிவிக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

இந்த நிறுவனத்தின் கீழ் ஒரே நேரத்தில் 5 புதிய வெப் தொடர்களைகளை தயாரிக்க திட்டமிட்டுள்ளதாகவும் சாக்ஷி மேலும் தெரிவித்துள்ளார். (4)

# கிரிக்கெட்டுக்கு திரும்பும் வரை மற்றுமொரு விளையாட்டு

## மத்தியூஸ் தெரிவிப்பு



கிரிக்கெட்டுக்கு திரும்பும் வரை மற்றொரு விளையாட்டை தேர்வு செய்துள்ளேன் என அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் மத்தியூஸ்க்கு 33 வயதாகிறது.

அவர் 217 ஒருநாள் போட்டிகளிலும், 86 டெஸ்ட் போட்டிகளிலும், 75 இருபது-20 போட்டிகளிலும் இலங்கை சர்வதேச அணிக்காக விளையாடியுள்ளார்.

தற்போது இலங்கை அணி எந்தவொரு சர்வதேச போட்டிகளிலும் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில் மத்தியூஸ் டுவிட்டரில் கிரிக்கெட்டுக்கு திரும்பும் வரை மற்றொரு விளையாட்டை தேர்வு செய்துள்ளேன் என பதிவிட்டுள்ளார்.

அதாவது கடற்கரையில் விளையாடும் விளையாட்டை தேர்வு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (4)

# பெங்களூர் நிலை குறித்து நியூசிலாந்து முன்னாள் வீரர் ஸ்காட்

ஐ.பி.எல்.தொடரில் பெங்களூர் அணி முதல் இடத்தில் இருக்கும் நிலையில், நியூசிலாந்து அணியின் முன்னாள் வீரர் ஸ்காட் ஸ்டைரிஸ் இது குறித்து டுவிட்டரில் பதிவேற்றம் செய்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வரும் ஐ.பி.எல் தொடரில், நேற்று முன்தினம் நடைபெற்ற ராஜஸ்தான் அணிக்கெதிரான போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம், பெங்களூர் அணி முதல் இடத்தை பிடித்தது.

எப்போதும் ஐ.பி.எல் தொடரில் பின்வாங்கும் பெங்களூர் அணி, இந்த முறை சிறப்பாக விளையாடி புள்ளிப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது. நான்கு போட்டிகள் தான் கிட்டத்தட்ட அனைத்து அணிகளும் விளையாடியுள்ளன.

இன்னும் பல போட்டிகள் இருக்கின்றன. அப்போது இது தலைகீழாக கூட மாறலாம். இருப்பினும் பெங்களூர் அணியை இப்படி பார்க்கும் பெங்களூர் ரசிகர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுக்கிறது. (4)

## ஆணின் சடலம்...

ஊர்காவற்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் இச்சடலம் கரையொதுங்கியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் இந்தியாவின் இராமேஸ்வரம் தங்கச்சி மடம் பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவர் உடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

அவர் கடந்த மாதம் 30ஆம் திகதி மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் கடலில் தவறி விழுந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-18.60)

## வவுனியாவில்...

துள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது. வவுனியா பன்றிக்கெய்த குளத்தில் வீடு ஒன்றில் சட்டவிரோதமாக துப்பாக்கிகளை (இடியன்துவக்கு) மறைத்து வைத்திருப்பதாக ஓமந்தை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலினையடுத்து.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் நான்கு சட்டவிரோத துப்பாக்கிகள் மீட்கப்பட்டதுடன் அதனை தமது உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-299)

தன நிதானய
திகதி - 2020.10.04
சீட்டிழுப்பு இலக்கம் - 324
F 01 05 13 33
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 04-10-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2560
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
M 23 29 30 78
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/10/04
சீட்டிழுப்பு இலக்கம் 4265
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
H 3 5 1 1 6 2
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 04/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0632
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
K 23 26 27 58 77

செவன
திகதி 04/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 301
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
Y 03 36 43 52

## பாடசாலை...

துள்ளது.

இரண்டாம் தவணை விடுமுறைக்காக பாடசாலைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மூடப்படவிருந்தன.

கம்பஹா மாவட்டத்தில் பெண் ஒருவருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து அனைத்துப் பாடசாலைகளுக்குமான விடுமுறை இன்று ஆரம்பமாவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதனிடையே ஏற்கனவே திட்டமிட்டபடி, எதிர்வரும் 11ஆம் திகதி 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும் என்றும், எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 6ஆம் திகதி வரை க.பொ.த உயர்தரப் பரீட்சையும் நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஞா)

## போர்க்குற்றம்...

யோசனை முன்வைத்துள்ளார்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் இதுகுறித்து ஜெனிவா மனித உரிமை பேரவையில் கூறியுள்ளார்.

பெப்லோ டி கிரைஸ், 19 பக்கங்களை கொண்ட தனது அறிக்கையை கடந்த வாரம் மனித உரிமை பேரவையில் தாக்கல் செய்துள்ளார்.

இலங்கை படை அதிகாரிகளான 59 பேருக்கு எதிராக மனித உரிமை பேரவை சர்வதேச சட்டத்தை அறிவித்துள்ளது.

இந்த சட்டத்திற்கு அமைய போர்க்குற்றம் சுமத்தப்பட்டுள்ள படை அதிகாரிகளை வெளிநாடுகளில் கைது செய்ய முடியும்.

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அமெரிக்காவுக்குள் வருவதை அந்நாடு தடை செய்துள்ளதுடன், கமால் குணரத்ன அவுஸ்திரேலியாவுக்கு வருவதனையும் அந்நாடு தடை செய்துள்ளது. (ஞா)

## பட்டப்பகலில்...

மேலும் தெரியவருவதாவது,

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொல்புரம் பகுதியில் வீட்டில் இருந்தவர்கள் வெளியில் சென்றிருந்தவேளை வீடு பட்டப்பகலில் உடைக்கப்பட்டுள்ளது.

இந்த திருட்டுச் சம்பவத்தில் 10 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (ஞா)

## கம்பஹாவில்...

மினுவங்கொட மற்றும் திவுலபிட்டிய, வெயங்கொட ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு உடன் அமுலாகும் வகையில் மீள் அறிவித்தல் வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஞா)

## மீண்டும்...

வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனையடுத்து கம்பஹா மருத்துவமனையின் 15 ஊழியர்கள் மற்றும் பெண் பணிபுரிந்து வந்துள்ள ஆடைக் கைத்தொழில் நிறுவனத்தைச் சேர்ந்த சுமார் 40 உத்தியோகத்தர்கள் அவர்களது வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை திவுலபிட்டிய மற்றும் மினுவானங்கொட ஆகிய பகுதிகளில் 850க்கும் மேற்பட்டோர் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

அந்தப் பெண்ணுடன் தொடர்புடையவர்களுக்கு பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு பெறப்படும் அறிக்கையை தொடர்ந்தே அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடனும் சுகாதார வழிகாட்டுதல்களை கடைப்பிடித்து செயற்படுமாறும் அமைச்சுக் கேட்டுள்ளது. (ஞா)

## முகக் கவசம்...

கம்பஹா திவுலபிட்டியவில் சமூகத் தொற்று ஏற்பட்டுள்ள நிலையில் நாடு முழுவதும் சுகாதார கட்டுப்பாடுகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்த பொலிஸாருக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் மாநகரில் பொலிஸார் வீதி சுற்றுக்காவல் நடவடிக்கைகளை நேற்று மாலை ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன், பேருந்துகளில் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு அமைய பயணிகள் ஏற்றப்படுகின்றனரா என்று பரிசோதனை செய்யும் பொலிஸார், முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற அறிவுறுத்துகின்றனர்.

மேலும் பொது இடங்களில் சமூக இடைவெளியை பொதுமக்கள் பின்பற்றுமாறும் பொலிஸார் அறிவுறுத்துகின்றனர். (ஞா)

## ஒரு வாரத்துக்கு...

விக்ரமாரச்சி ஆயுர்வேத மருத்துவ கல்லூரி, நைவல உயர்தொழில்நுட்ப கல்வி நிறுவனம் ஆகியன ஒரு வாரத்திற்கு மூடப்படவுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

விடுதிகளில் தங்கியிருப்பவர்களை உடனடியாக வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## புங்...

எம் காணப்பட்ட பெண் பணியாற்றிய மினுவாங்கொட பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய புங்குடுதீவைச் சேர்ந்த இரண்டு யுவதிகள் விடுமுறையில் வீடு திரும்பியதையடுத்து, அவர்களின்குடும்ப உறுப்பினர்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் இரண்டு யுவதிகளும் நேற்று விடுமுறையில் வீடு திரும்பியுள்ளனர். ஒரு யுவதியின் குடும்ப உறுப்பினர்கள் 18 பேரும், இன்னொரு யுவதியின் குடும்ப உறுப்பினர்கள் 2 பேர் மற்றும் 2 யுவதிகள் என 22 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இவர் களிடம் நேற்று மாலை பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஞா)

## சின்னத்தில்...

வல்வை உதைபந்தாட்ட பிரிமியர் லீக் தொடரின் நேற்றைய முதல் நாள் ஆரம்ப நிகழ்வில் அணி ஒன்றின் கொடியில் உறுமும் புலிகளின் சின்னம் இருந்த மையால் இராணுவத்தினரும் பொலிஸாரும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை, ஊரணி மைதானத்தில் இந்த உதைபந்தாட்டத் தொடர் நேற்று ஆரம்பமாகி இடம்பெறுகிறது.

அந்த சின்னம் பொறிக்கப்பட்ட கொடியை ஏற்றுவதற்கோ அல்லது காட்சிப்படுத்துவதற்கோ அனுமதிக்க முடியாது என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்தத் தொடரின் போது அந்தச் சின்னம் பயன்படுத்த முடியாது என்று கூறிவிட்டு இராணுவத்தினரும் பொலிஸாரும் மைதானத்திலிருந்து சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஞா)

## ஆடைத் தொழிற்...

காரிகள் தெரிவித்துள்ளனர்.

யகாதுவ பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு முன்னணி ஆடைத் தொழிற்சாலையிலேயே குறித்த பெண் பணிபுரிந்து வந்துள்ளமையினால், குறித்த ஆடை தொழிற்சாலைக்கு தற்போது சீல் வைக்கப்பட்டுள்ளது. (ஞா)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

அத கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1061
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2020.10.04
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 75,437,580/-
வெற்றி இலக்கங்கள் 09 12 20 23 P
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 8404
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 209
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.10.04
சீட்டிழுப்பு இல. : 3391
வர்ணம் : இளஞ்சிவப்பு
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 44,051,358.40
வெற்றி இலக்கங்கள் 11 45 46 57 J
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 6261
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1235 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 04.10.2020 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
T 15 56 59 62
52,009,051.20
SUPER 500 7 4 6 9

ராசி
திகதி 04/10/2020 வெற்றி வாரம் 2942
சுப்பர் ஜக்பொட் ரூ. 36,50,773 வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 06 08 22 52 மிதுனம்
7024
443
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8.159.120

633
மஞ்சள்
04.10 2020
ஞாயிற்றுக்கிழமை
R 07 14 36 80
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 85,332,875
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

**வேலை வாய்ப்பு**

அரச அங்கீகாரம் பெற்ற எமது நிறுவனத்தில் இணைந்து கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம். வடமாகாணம் முழுவதுமாக 30 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை : 18 - 30

தகைமை O/L பரீட்சையில் தோற்றியிருத்தல் கட்டாயமானது. அனுபவம் உள்ளவர்கள் / அனுபவம் அற்றவர்கள் இணைந்து கொள்ளலாம். ஆண் / பெண் இருபாலாரும் இணைந்து கொள்ளலாம். (4376)

தொடர்புகளுக்கு : 076 808 2241

ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்

**அன்பொளி கல்வியகம்**

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

அனுமதிகளை முற்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். (C-455) இயக்குநர்

**உடுப்பிட்டி ப. நோ.கூ. சங்கம் (வ-து)**

**தொழிலாளர்கள் தேவை**

எமது சங்கத்தின் அரிசியாலையில் கடமையாற்றுவதற்கு தொழிலாளர்கள் தேவை. மேலதிக விபரங்களுக்கு 021 226 4036 என்ற அலுவலக இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம். (C-475)

மீண்டும்

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-460)

**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 3536


## சமஷ்டி...

நியூ இந்தியா ஃபோராம் அமைப்பின் ஏற்பாட்டில் "இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் இன்றைய நிலையும் இந்தியாவின் பங்கும்" என்ற தலைப்பில் நேற்று ஞாயிறுக்கிழமை ஒழுங்கு செய்த காணொலி மூலக் கருத்தரங்கில் சிறப்புரை ஆற்றியபோதே விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"13 ஆவது திருத்தச் சட்டம் இந்திய-இலங்கை இருதரப்பு உடன்படிக்கைக்கு உட்பட்டது. 13 ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாமல் செய்வது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை சவாலுக்கு உட்படுத்துவதாக அமையும். இலங்கையில் தமிழ் மக்கள் ஒரு சமஷ்டி தீர்வினை இந்தியாவின் உதவியுடன் வென்றெடுப்பதற்கு இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஒரு கருவியாக இருக்க முடியும் என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்கமுடியாது. ஆகவே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இந்தியா நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இறுதித் தீர்வான சமஷ்டி முறையை எட்டும் வரை, போரை முடிவுக்கு கொண்டுவர உதவிகளைப் பெறும் போது இலங்கை அரசு வழங்கிய "13ம் அதற்கு மேலாகவும்" என்ற வாக்குறுதிகளை செயற்படுத்த அது முன்வரவேண்டும். அதற்கான தேவையும் அவசியமும் இலங்கை தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் இன்று ஏற்பட்டிருக்கின்றது. " என்றும் விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

விக்னேஸ்வரன் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டம் அதன் வரைபின் அடிப்படையிலும் நடைமுறையின் அடிப்படையிலும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை திருப்திப்படுத்தும் வகையில் அமையாமை காரணமாக தமிழ் மக்களின் தரப்புக்களும் தலைமைகளும் காலத்துக்கு காலம் தமக்கான தீர்வு எப்படி அமையவேண்டும் என்று தீர்வு திட்டங்களை இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் முன்வைத்துள்ளனர். அவற்றுள் முக்கியமானவையாக வட மாகாண சபை மற்றும் தமிழ் மக்கள் பேரவை ஆகியவை பொதுமக்களுடன் கலந்தாலோசித்து தீர்வு திட்டங்களை முன்வைத்துள்ளன. இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் இந்த தீர்வு திட்டங்கள் பரிசீலனை செய்யப்படவேண்டும். அத்துடன், எதிர்வரும் காலங்களில், தீர்வுக்கான எந்த முயற்சியும் தமிழ் மக்கள் ஒரு தேசம் என்பதன் அடிப்படையில், அவர்கள் ஒரு தரப்பாக கருதப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். நான் முன்னர் குறிப்பிட்டதுபோல, 13 ஆவது திருத்த சட்ட முன்னெடுப்புக்களில் தமிழ் மக்கள் ஒரு தரப்பாகவோ அல்லது அவர்களின் ஆலோசனையோ பெறப்படவில்லை.

இந்தியாவைக் கையாள்வதில் முன்னர் போல இலங்கை அரசாங்கம் பல்வேறு ஏமாற்று வித்தைகளை மேற்கொள்ளும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதற்கு அமைவாக இந்திய மக்களும் அதன் மத்திய மாநில அரசாங்கங்களும் செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார். (ஞா)


பயிற்சியுடன் உடனடி **வேலை வாய்ப்பு**

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்)

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் **V2 TRAVELS**

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்
- ஆரம்ப சம்பளம் -15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0768226243 v2vacancies@gmail.com

**அமெரிக்க லொத்தர் விசா**

பதிவுகள் ஆரம்பம் 08-10-2020

நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க லொத்தர் விசா அதிஸ்டசாலி ஆகலாம்.

இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட உடனடியாக கடவுச்சீட்டினை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள் (C-308)

என்றும் உங்கள் மீது அக்கறையுடன் **V2 TRAVELS**

0768226244

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

UK- 1025 /=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்: யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், மானிப்பாய், புதுக்குடியிருப்பு, சுன்னாகம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-308)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும். (4371)

தொடர்பு: றாஜ் - 077 679 6623

**கணினி திருத்தம்**

- கணினி, லப்டொப் சிறந்த முறையில் திருத்தித் தரப்படும்.
- சிசிரிவி கமரா பொருத்துதல் சேவையும் பெற்றுக் கொள்ளலாம். (4379)

076 827 5129
021 222 8797

**PC Garage**

255 B, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## செல்லத்துரை சயனொளிபவன்

( Cricket Uncle )

மலர்வு 03.08.1941 உதிர்வு 17.10.2019



கனவினைக் கழித்தால் வாழ்வில்
கனிவான நினைவே எஞ்சும்
நினைவுகள் அழிந்தால் வாழ்வும்
நிஜமன்று உண்மை புரியும்
தினம் நீளும் கனவில் உன்றன்
திவ்விய நினைவில் வாழும்
மனங்களைப் பாருமய்யா
மனை - மகன் மருகி பேரர்.....

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (4372)

குடும்பத்தினர்


ஊர்த் தென்னம்பிள்ளைகள் விற்பனைக்குண்டு.

076 698 2219 (4374)

**பௌதிகவியல் / PHYSICS**

( 2021, 2022 )

தமிழ், ஆங்கில மொழிமூல தனிப்பட்ட, குழு வகுப்புக்கள். (4375)

ஆ. நித்தியானந்தன் (B.Sc., Dip. in Ed.)

தொடர்புகளுக்கு : 076 799 9005

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், ஊரெழு, பலாலி வீதி, பொக்கன் வீதியில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

1 1/2 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். ( பலாலி வீதியில் இருந்து 120 m தூரத்தில் காணி உள்ளது. )

தரகர் தேவையில்லை. (4372)

077 468 3354, 076 221 2037

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கோப்பாய், இராச வீதியில் கிருஷ்ணன் கோவில் சந்திக்கும் இராச வீதி சந்திக்கும் இடையில் 26 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

1 1/2 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

தரகர் தேவையில்லை. (4372)

077 468 3354, 076 221 2037

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், ஆறுகால் மடத்தில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(ஒவ்வொரு பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.)

தரகர் தேவையில்லை. (4351)

077 468 3354 / 076 221 2037

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கோப்பாய் இராச வீதியில் (யாழ். தேசிய கல்வியற் கல்லூரி வீதி) 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

1 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். ( இராச வீதியில் இருந்து 60 m தூரத்தில் காணி உள்ளது. )

தரகர் தேவையில்லை. (4372)

077 468 3354, 076 221 2037


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.